ரமலானின் சிறப்புகள் பக்கம் 3

உங்களது அனைத்து வெற்றிகள் மற்றும் ஈடேற்றத்திற்கான தலையூற்று திருக்குர்ஆனில் உள்ளது பக்கம் 5

ஓர் அருளுக்குரிய மகனின் நற்செய்தி! பக்கம் 14

மஜ்லிஸே ஷூரா யு.கே மற்றும் கனடா (தொடர்ச்சி...) பக்கம் 20



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | February 2026 | Vol. 5 - Issue No. 3


Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


## ரமலான் முபாரக்!

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**எவர் ஈமானின் நிலையில் தனது ஆன்மாவை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி ரமலானின் நோன்புகளை நோற்கிறாரோ அவருடைய கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.**

(புகாரி ஹதீஸ் - 1901)



# திருக்குர்ஆன்

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُتِبَ عَلَيْكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ ١٨٤

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோர்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் (ஆன்மிக, நல்லொழுக்கப் பலவீனங்களிலிருந்து) தவிர்ந்து கொள்ளலாம். (2:184)



# ஹதீஸ்

قَالَ رَسُولُ اللهِ (صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهِ وَسَلَّمَ):
" قَالَ اللَّهُ كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إِلاَّ الصِّيَامَ، فَإِنَّهُ لِي، وَأَنَا أَجْزِي بِهِ. وَالصِّيَامُ جُنَّةٌ، وَإِذَا كَانَ يَوْمُ صَوْمِ أَحَدِكُمْ، فَلاَ يَرْفُثْ وَلاَ يَصْخَبْ، فَإِنْ سَابَّهُ أَحَدٌ، أَوْ قَاتَلَهُ فَلْيَقُلْ إِنِّي امْرُؤٌ صَائِمٌ. وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَخُلُوفُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللَّهِ مِنْ رِيحِ الْمِسْكِ، لِلصَّائِمِ فَرْحَتَانِ يَفْرَحُهُمَا إِذَا أَفْطَرَ فَرِحَ، وَإِذَا لَقِيَ رَبَّهُ فَرِحَ بِصَوْمِهِ ".

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். நோன்பைத் தவிர ஆதமுடைய ஒவ்வொரு செயலும் அவனுக்குரியதாகும்! நிச்சயமாக நோன்பு எனக்கு (மட்டுமே) உரியது: அதற்கு நானே கூலியாவேன்! நோன்பு (பாவங்களிலிருந்து காக்கும்) கேடயமாகும்! எனவே உங்களில் ஒருவர் நோன்பு நோற்றால் அவர் கெட்ட பேச்சுகள் பேச வேண்டாம்! கூச்சலிட்டு சச்சரவு செய்ய வேண்டாம்! யாரேனும் அவரை ஏசினால் அல்லது அவருடன் சண்டையிட்டால் ‘நான் நோன்பாளி’ என்று அவர் சொல்லட்டும்! முஹம்மதின் உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் நறுமணத்தை விட விருப்பமானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு திறக்கும் பொழுது அவன் மகிழ்ச்சி அடைகிறான்; தன் இறைவனைச் சந்திக்கும் பொழுது நோன்பின் காரணமாக அவன் மகிழ்ச்சியடைகிறான். (புஹாரி ஹதீஸ் எண். 1904)




شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ
وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ

***ஷஹ்ரு ரமலானல்லதீ உன்ஸில ஃபீஹில் குர்ஆன்*** – ரமலான் மாதத்தில் குர்ஆன் இறக்கப்பட்டது. ***ஹுதன் லின்னாஸி*** – இதில் மக்களுக்கு நேர்வழி இருக்கிறது. ***வபய்யினாத்திம் மினல் ஹுதா*** – நேர்வழிகளிலும் வெளிப்படையான, ஒளிமிக்க நேர்வழியாகும். ***வல் ஃபுர்கான்*** – மேலும் இது தெளிவான அடையாளங்களைக் கொண்டதாகும். அதாவது இது தன்னிடம் பெரிய உறுதியான சான்றுகளைக் கொண்டுள்ளது.

***ஷஹ்ரு ரமலானல்லதீ உன்ஸில ஃபீஹில் குர்ஆன்*** என்ற இதே வசனத்திற்கு இன்னொரு பொருள், ரமலான் மாதம் எத்தகைய மகத்துவம் வாய்ந்தது என்றால், இதைப் பற்றி விளக்குவதற்காகவே திருக்குர்ஆனே இறக்கப்பட்டது.

'ரமலானில் திருக்குர்ஆன் இறக்கப்பட்டது' என்ற முதலில் கூறிய மொழியாக்கத்தின் கருத்து, ரமலானில் முழுக்குர்ஆனும் இறக்கப்பட்டது என்பதாகும் என பொதுவாக விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது சரியன்று. ஏனென்றால், திருக்குர்ஆன் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியது. முழுக்குர்ஆனும் இறங்கி முழுமையடைந்து விட்டதற்குப் பிறகு வந்த ரமலானைத் தவிர வேறு எந்த ரமலானிலும் முழுக்குர்ஆனும் கூறப்பட்டிருக்கவே முடியாது.

இரண்டாவது, ரமலான் என்பது மிகவும் பிந்தைய காலத்தில் கடமையாக்கப்பட்டது. ஆனால் திருக்குர்ஆனோ நுபுவ்வத்தின் முதல் நாளிலிருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அப்படியிருக்கும்போது இதற்கும் ரமலானுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? எனவே திருக்குர்ஆன் ரமலானில் இறக்கப்பட்டது எனக் கூறுவது இந்த வகையில் பார்க்கும்போது சரியானதன்று. அதுவரை இறக்கப்பட்டது ரமலானில் திருப்பிக் கூறப்பட்டது எனக் கூறலாம்.

***உன்ஸில ஃபீஹில் குர்ஆன்*** (திருக்குர்அன் ரமலானில் இறங்கியது) என்பதற்கு அந்த ரமலான் வரை திருக்குர்ஆனின் எவ்வளவு பகுதி இறக்கப்பட்டிருந்ததோ அது ரமலானில் திரும்ப இறக்கப்பட்டது என்ற ஒரு பொருளையும் கொடுக்கலாம். அது சரியானதாகும். இதன் இன்னொரு பொருள், திருக்குர்ஆனின் அர்த்தங்களுக்கு ஆற்றல் வழங்குவதற்காகவும் அதனை வலுவூட்டுவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒவ்வொரு ரமலானிலும் சென்ற காலம் வரை இறங்கிய திருக்குர்ஆன் திரும்ப எடுத்துரைக்கப்பட்டு வந்திருக்கிறது.

'***ஷஹ்ரு ரமலானல்லதீ உன்ஸில ஃபீஹில் குர்ஆன்***' என்பதன் இரண்டாவது பொருளை நான் ஏற்கெனவே கூறினேன். அதாவது, ரமலான் எத்தகைய மகத்துவமிக்க மாதம் என்றால், இந்த மாதத்தைப் பற்றிதான் திருக்குர்அன் இறங்கியுள்ளது. இந்தப் பொருள் மிக விரிவானது. திருக்குர்ஆனில் எத்தனை போதனைகள் உள்ளனவோ அவையனைத்தும் ரமலானில் மனிதனுக்கு செயல்படத் தகுந்தவையாகி விடுகின்றன என்பது இதன் கருத்தாகும். பொதுவான மாதங்களில் அவற்றை மனிதன் மேற்கொள்ளலாம் என்றாலும் அது கண்டிப்பல்ல. ஆனால் ரமலானுக்குப் பொருந்திவராத எந்தவொரு போதனையும் திருக்குர்ஆனில் இல்லை. ரமலானைப் பற்றியே திருக்குர்ஆன் இறங்குமளவுக்கு அம்மாதம் மிகவும் மகத்துவமுள்ளதாகும்.

பாருங்கள்! நோன்பு ஒரு பெரிய முக்கிய தியாகமாகும். ***இஸ்தயீனு பிஸ்ஸப்ரி வஸ்ஸலாத்தி*** – நீங்கள் பொறுமை –யுடனும், தொழுகையுடனும் உதவி தேடுங்கள். (2:154) என்ற வசனத்தில் உள்ள ஸலாத் என்பது நோன்பைக் குறிக்கிறது எனப் பல விரிவுரையாளர்கள் எழுதியுள்ளார்கள். அதாவது, நீங்கள் பொறுமையுடனும் நோன்புடனும் அல்லாஹ்விடம் உதவி

தேடுங்கள் என்று பொருளாகும். ஆனால் வருடம் முழுவதிலும் நோன்பு வைப்பவர்கள் எத்தனை பேர்? அல்லது வருடத்தில் ஏதாவது ஒரு மாதத்தில் நோன்பு வைப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் மற்ற மாதங்களில் நோன்பு வைப்பதேயில்லை. எப்போதாவது கஷ்டம் ஏதும் வந்தால் சிலர் வைக்கவும் செய்கிறார்கள். அவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் தான் உள்ளனர்.

இந்தப் பொருளின்படி ***உன்ஸில ஃபீஹில் குர்ஆன்*** (ரமலானைப் பற்றிதான் திருக்குர்ஆன் இறங்கியுள்ளது) என்பதன் கருத்து, எல்லா முஸ்லிம்களும் நோன்பு வைக்கும் மாதம் இந்த மாதம் தான். ரமலானில் நோன்பு வைக்காத எந்த முஸ்லிமும் உலகில் இல்லை. தொழாதவர்கள் கூட நோன்பு வைத்து விட்டு, நமது நோன்புகள் நம் தொழுகைகளை மன்னிக்க வைத்து விடும் எனக் கருதுகின்றனர். மற்ற எந்த நற்செயல்களையும் செய்யாதவர்கள் ரமலானின் கடைசி பத்து நோன்புகளை வைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். பல வகையான தீமைகள் செய்பவர்களும், மது அருந்துபவர்களும் ரமலானின் நோன்புகள் அவை அனைத்தையும் மன்னிக்கச் செய்து விடும் எனக் கருதுகிறார்கள். நோன்பைப் பற்றி இந்த அளவுக்கு மக்கள் வலுவான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

எனவே, ரமலானைப் பற்றி திருக்குர்ஆன் இறங்கியது என்பதன் கருத்து, இந்த மாதத்தில் திருக்குர்ஆனில் எல்லா போதனைகளும் மிகக் கடுமையாக செயல்படுத்தப்படுகின்றன. திருக்குர்ஆனின் குறிக்கோளே இந்த மாதத்தைப் பற்றியதுதான்; இந்த மாதத்தை விளக்குவதுதான்; இந்த மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நன்மைகளைப் பற்றி விளக்கிக் கூறுவதுதான் என்பது போல் தெரியும். இந்த வகையில் இந்த ரமலான் மூலம் நமக்கு என்னென்ன கிடைக்கும் என்று இந்த வசனத்தின்படி நாம் இப்போது சிந்திக்க வேண்டும்.

ரமலானைப் பற்றி குர்ஆன் இறங்கியது என்ற விஷயம் உண்மையானால், அடுத்து கூறப்பட்டுள்ள ***ஹுதன் லின்னாஸ்*** – அதாவது இந்த ரமலானும், திருக்குர்ஆனும் மக்களுடைய நேர்வழிக்காக அனுப்பப்பட்டுள்ளன என்ற கூற்றும் சரியான –தாகும். இந்த மாதத்தைக் கடந்து சென்ற பிறகு, திருக்குர்ஆனை அதிகமாக ஓதி உணர்ந்த பிறகு அவை இரண்டும் மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்குக் காரணமாக அமையும்.

ஒருவர் ரமலானைக் கடந்து சென்று விட்டார். ஆனால் நேர்வழி பெறவில்லையென்றால் திருக்குர்ஆன் உண்மையானதா அல்லது அவர் உண்மையாளரா? நான் ரமலானில் நோன்பு வைத்தேன். நான் என் பாவங்களை மன்னிக்க வைத்து விட்டேன் என்பதெல்லாம் தவறானதாகி விடும். ஏனெனில் அருளுக்குரிய ரமலானில் கொஞ்சமாவது நாம் நேர்வழிக்கான வழிவகைளை உருவாக்க வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவதன் மூலமாகவோ அல்லது நோன்புகளின் மூலமாகவோ இவ்விரு நிலையிலும் நமக்கு கண்டிப்பாக நேர்வழி கிடைக்க வேண்டும்.

எவர்களுக்கு ஏற்கெனவே ஹிதாயத் (நேர்வழி) கிடைத்திருக்கிறதோ அவர்களுக்கு ***வபய்யினாத்திம் மினல் ஹுதா*** என்ற நற்செய்தி இருக்கிறது. ரமலான் நாட்களில் மகத்தான நேர்வழிகள் அவர்களுக்குக் கிடைக்கும். அவை கண்களை திறந்து விடும். அதன் பக்கம் இதற்கு முன்னர் நமது கவனமே சென்றிருக்காது. 'பய்யினாத்' என்றால் கண்களை கூச வைக்கும் வகையில் தற்காலிகமாக அதிக ஒளி கிடைத்தல். ஒஹோ! இதில் இதுவும் இருந்ததா என மனிதன் வியந்து போய் விடுதல். அப்படிப்பட்ட ஒளிமிக்க நேர்வழிகள் இந்த மாதத்தில் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அவை முன்னரே திருக்குர்ஆனில் இருந்தவை தான்.

***வபய்யினாத்திம் மினல் ஹுதா*** (நேர்வழிக்கான தெளிவான அடையாளங்கள் இதில் உள்ளன) என்பதில் வந்துள்ள 'இதில்' என்பது திருக்குர்ஆனையும் குறிக்கும். அதாவது தெளிவான அடையாளங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. ஆனால் அதன் பக்கம் கண் திறக்காமல் இருந்தது. மனிதனுடைய கண்கள் திறப்பதற்கான காலகட்டம் ஒவ்வொரு ரமலானிலும் இவ்வாறு வந்து கொண்டேயிருக்கிறது. நான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன் என வாழ்நாள் முழுவதும் மனிதன் நினைக்கின்றான். ஆனால் இப்போது தான் இந்த வசனம் இறங்கியது என்பது போன்று ரமலானில் சில நேரத்தில் உணர்வு ஏற்படுகிறது. அப்போதுதான் இந்த வசனத்தின் கருத்து புரிந்தது என்பது போன்று தெரியும்போது அந்த நேரத்தில் அது பய்யினாத் என்ற தெளிவான அடையாளங்களில் உள்ள ஒன்றாக எண்ணப்படும்.

***வல் ஃபுர்கான்*** – மிகவும் உறுதியான சான்றுகளை அது (அதாவது ரமலான் மற்றும் திருக்குர்ஆன்) மனிதனுக்கு வழங்குகிறது. இதில் தெளிவான சான்றுகள் (ஃபுர்கான்) உள்ளன என்பதன் கருத்து, நாம் நேர்வழியில் இருக்கிறோமா இல்லையா என்ற சந்தேகத்தில் இருக்கும் மனிதனை இந்தக் குர்ஆன் அல்லது இந்த ரமலான் 'ஃபுர்கான்' ஆக மாற்றி விடுகிறது. அவரை பிற மனிதர்களை விட்டும் வித்தியாசமானவ –ராக மாற்றி விடுகிறது. இதனால் திருக்குர்ஆன் பிற வேத நூல்களை விட்டும் வித்தியாசமானதும் சிறப்பானதுமாக இருப்பதைப் போன்று அந்த மனிதரும் வித்தியாசமானராகவும், சிறப்பானவராகவும் மாறி விடுகிறார்.

***ஃபமன் ஷஹித மின்குமுஷ் ஷஹ்ர ஃபல்யசும் ஹு*** எவர் இந்த மாதத்தைக் காண்பாரோ அவர் இந்த மாதத்தில் நோன்பு நோற்கட்டும். 'ஷஹித' என்பதன் இன்னொரு பொருள், எவர் ரமலானின் உண்மை நிலையைப் புரிந்து இம்மாதத்தைப் பெற்றாரோ, ரமலானின் சிறப்புத் தன்மைக்கு ஒரு சாட்சியாக விளங்குகிறாரோ அத்தகையவர் ரமலானின் நோன்பை வைப்பது கட்டாயமாகும். நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் மற்ற நாட்களில் கணக்கிட்டு(நோற்று)க் கொள்ளவும்.

# உங்களுடைய
# அனைத்து வெற்றிகள்
# மற்றும்
# ஈடேற்றத்திற்கான தலையூற்று
# திருக்குர்ஆனில்
# உள்ளது



**ஹாஃபிஸ் சய்யித் ரஸூல் நியாஸ் சாஹிப் (முரப்பி நஷ்ரோ இஷாஅத் காதியான்)**

**தமிழாக்கம்: இப்னு வஸீம்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

சுருக்கமாக, திருக்குர்ஆன் அமானிதம், நேர்மை மற்றும் உடன்படிக்கைகள் ஆகியவற்றைக் கடைபிடிப்பதற்கு சிறப்பான முக்கியத்துவம் வழங்குகிறது. மேலும், அமானிதம் மற்றும் உடன்படிக்கையைப் பேணுதல் ஆகியவற்றிலும் சிறந்த முன்மாதிரியை முன்வைக்கும் மு.ஃமின்களால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்று கூறுகிறது.

பிறகு கூறுகிறான்: தம் தொழுகைகளைக் காப்பவர்களே வெற்றி மற்றும் உண்மையான ஈடேற்றத்தை அடைபவர்கள். இங்கு முழு சமுதாயமும் தொழுகையைக் கடைப்பிடிப்பது பொருள்படுகிறது. பாங்கு சொல்பவர் பாங்கில் 'ஹய்யஅலஸ்ஸலாஹ்'-வுக்குப் பிறகு 'ஹய்யஅலல்.ஃபலாஹ்' என்று கூறுகிறார். தொழுகையுடனேயே .ஃபலாஹ் (வெற்றி) இணைந்துள்ளது. ஆனால், நற்பேறின்மையினால், மக்கள் இந்தத் தொழுகையையே விட்டு விட்டு மற்ற எல்லா இடங்களிலும் வெற்றிக்காகத் துடிக்கிறார்கள். .ஃகாலிப் இந்தக் கருத்தை மிகவும் அழகிய பாணியில் இவ்வாறு வெளிப்படுத்தினார்:

வாசல் சுவரெங்கும் பசுமை துளிர் விடுகிறது, .ஃகாலிப்! நாம் பாலைவனத்தில் இருக்க, வீட்டில் வசந்தம் வந்துள்ளது!

சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம் ஒரு வாகி.ஃபே நவ் பிள்ளை, 'ஹுஸூர்! தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் முறையாக செயல்படுவது வெற்றியின் திறவுகோல் என்று தாங்கள் வலியுறுத்திக் கூறினீர்கள். அப்படியென்றால், தொழவும் செய்யாத, அல்லாஹ்வை நினைவும் கூராத எலான் மஸ்க் மற்றும் ஜெ.ஃப் பெஸோஸ் ஏன் அவ்வளவு வெற்றிகரமானவர்களாகவும், செல்வந்தர்களாகவும் உள்ளனர்?' என்று வினவினார்.

அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தபோது, ஷைத்தான் அல்லாஹ்வுக்கு சஜ்தா செய்யவும், ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்குக் கட்டுப்படவும் மறுத்து விட்டான்... அதற்குக் காரணம், ஆணவம் மற்றும் உலக ஆசைகள். 'அதிகமான மக்கள் என்னைப் பின்பற்றுவார்கள்' என்று அவன் அல்லாஹ்விடம் சவால் விட்டான்... உன்னால் அப்படி செய்ய முடியாது என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக, (அல்லாஹ் கூறினான்: எனினும், இறையச்சம் கொண்டவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்கள் என் கட்டளைகள்படி செயல்படுபவர்களாக இருப்பார்கள். என் நபிமார்கள் மீது ஈமான் கொள்வார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பார்கள்தான்; ஆயினும், அவர்களே கடைசியில் வெற்றி பெறுவார்கள்.

உங்கள் குறிக்கோள் உலக ஆசைகளைப் பெறுவது கிடையாது. மாறாக, உங்கள் குறிக்கோள் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதே... இறையச்சமுள்ள ஒரு நபருக்கு மறுமையில் கூலி அளிக்கப்படும். இந்த உலகவாதிகளுக்கு அவர்களின் கூலி இந்த உலகத்திலேயே கிடைத்து விடுகிறது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இத்தகைய மக்களின் வலது கண் குருடாக உள்ளது. அதாவது, இத்தகைய மக்களின் மார்க்க அறிவு மற்றும் மார்க்கத்தின் கண் குருடாக உள்ளது. இத்தகைய மக்களின் இடது கண் வேலை செய்கிறது. இதன் பொருள் என்னவென்றால், அவர்கள் உலகரீதியில் முன்னேறுவார்கள். உங்கள் வாழ்வின் குறிக்கோள் வெறும் உலகப் பயன்களைப் பெறுவதானால், பிறகு நீங்கள் தொழுகை மற்றும் இஸ்லாத்தை விட்டுவிட்டு, உங்கள் மனம் விரும்பிய எந்தவொரு செயலையும் செய்யலாம். ஆனால், மரணத்திற்குப் பிறகும் நமக்கு ஒரு வாழ்வு உள்ளது. அது நிரந்தரமான வாழ்வு என்பதில் நீங்கள் ஈமான் கொண்டிருந்தால், பிறகு நீங்கள் இந்த உலகிலும், மறுமையிலும் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுக் கொள்வீர்கள்."(அல் .ஃபஸ்ல் இணைய நாளிதழ், டிசம்பர் 9, 2022)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “தொழுங்கள்! தொழுங்கள்!! ஏனெனில், அது அனைத்து நற்பேறுகளின் திறவுகோல் ஆகும்.” (இஸாலயே அவ்ஹாம், பக்கம் 449)

உள்ளத்தின் விருப்பத்துடன் தொழுகை மற்றும் நோன்பைக் கடைப்பிடித்திடுங்கள். கட்டளைகளின் எந்தவொரு பகுதியும் புறக்கணிக்கப்படாமல் இருக்கட்டும்.

திருக்குர்ஆன் இந்த விஷயங்களை அறிவிக்கிறது: ‘நன்மையின் பக்கம் அழைத்து, நல்லவற்றை போதித்து, தீயவற்றிலிருந்து தடுப்பவர்களே வெற்றி பெற்றவர்கள்.’ (3:105) ‘தங்கள் (நன்மைகளின்) எடைகள் கனமாக இருப்பவர்கள்.’ (23:103) ‘எழுத்தறிவற்ற நபியாகிய, இத்தூதர் மீது ஈமான் கொள்பவர்கள், அவருக்கு கண்ணியமளித்து, அவருக்கு உதவி செய்து, அவருடன் இறக்கப்பட்டுள்ள ஒளியினைப் பின்பற்றுபவர்கள்.’ (3:158) ‘தங்கள் செல்வங்களாலும் உயிர்களாலும் போரிடுகின்றவர்கள்’. (9:88) ‘நாங்கள் செவியேற்றோம் கட்டுப்பட்டோம்’ என்று கூறியவர்கள். (24:52) ‘உறவினர்கள், மிஸ்கீன்கள் மற்றும் வழிப்போக்கர்களுக்கு அவர்களுக்கு உரியதைக் கொடுப்பவர்கள்.’ (30:39) ‘அல்லாஹ் அவர்களைப் பற்றித் திருப்தி கொண்டு, அவர்கள் அவனைப் பற்றித் திருப்தி கொண்டவர்கள்.’ (58:23) ‘அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவு கூருபவர்கள்.’ (7:70) ‘அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்கள்.’ (2:190) ‘வட்டியை விழுங்காதவர்கள்.’ (3:131) ‘பொறுமை காத்தவாறு பொறுமைகாக்க வலியுறுத்துபவர்கள்.’ ‘எல்லைகளைப் பாதுகாப்பதற்கு ஆயத்தமாக இருப்பவர்கள்.’ (3:201) ‘அல்லாஹ்வை நெருங்குவதற்கான வழியினைத் தேடுபவர்கள்.’ (5:36) ‘போதை ஏற்படுத்தும் பொருள், சூதாட்டம், சிலை வழிபாடு மற்றும் குறி பார்க்கும் அம்புகள் போன்ற எல்லாத் தூய்மையற்ற ஷைத்தானிய செயல்களில் இருந்தும் தவிர்ந்திருப்பவர்கள்.’ (5:91) ‘போரில் உறுதியாக நிலைத்து நின்றவாறு, அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருபவர்கள்.’ (8:46) ‘பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்கும் பெண்கள், அழகை மறைத்திடும் பெண்கள் வெற்றி பெறுபவர்கள் ஆவார்கள்.’ (24:32) ‘நம்பிக்கை கொண்டு, நற்செயலாற்றுபவர்கள்.’ (28:68) ‘உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து தவிர்ந்து கொள்பவர்கள் வெற்றி பெறுபவர்கள் ஆவார்கள்.’ (59:10) ‘ஆன்மாவைத் தூய்மைப்படுத்துபவர்கள்.’ (91:10) ‘அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்கள் ஆகியோரில் முதலாவதாக முந்திக் கொண்டவர்கள் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.’ (9:100) ‘ஆனால், அல்லாஹ்வின் வசனத்தைப் பொய்ப்பிப்பவர்கள், மந்திரவாதிகள் மற்றும் அநியாயக்காரர்கள்.’ (10:78, 12:24) ‘பொய்யுரைப்பவர்கள்.’ (10:70) ‘அல்லாஹ்வை அன்றி வேறு கடவுளை அழைப்பவர்கள்’ (23:118) ஆகியோர் வெற்றி பெறுவதில்லை.

சுருக்கமாக, திருக்குர்ஆனின் மூலமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு இந்த உலகிலும், மறுமையிலும் உண்மையான வெற்றி மற்றும் ஈடேற்றம் கிடைக்கப் பெறும். சூரா அல் மு.ஃ.மினூனில் அல்லாஹ் கூறுகிறான்:

بَلْ اَتَيْنٰهُمْ بِذِكْرِهِمْ فَهُمْ عَنْ ذِكْرِهِمْ مُّعْرِضُوْنَ

இந்த வசனத்தின் விளக்கத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “திருக்குர்ஆனை ஸிக்ர் என்று உரைத்து, இந்த மறை தனது சொந்த சிறப்புகளின் அடிப்படையில் ஒரு மாபெரும் பெருமையையும் மேன்மையையும் கொண்டுள்ளது என்பது மட்டுமின்றி, உண்மையான உள்ளத்துடன் இதன் மீது ஈமான் கொள்பவர்களும் உலகத்தில் மதிப்பிற்குரியவர்களாகவும், கண்ணியத்திற்குரியவர்களாகவும் ஆகி விடுவார்கள் என்பது




சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆக, பார்த்துக் கொள்ளுங்கள்! ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எத்தகைய ஒரு சமுதாயத்தில் வருகை தந்தார்கள் என்றால், அது நாகரிகமற்றதாகவும், பண்பாடு மற்றும் ஒழுக்கத்தின் வழிமுறைகளைப் பற்றி முற்றிலும் அறியாததாகவும் இருந்தது. எல்லா விதமான சீர்கேடுகள் அதில் காணப்பட்டன. அந்த மக்கள் கொள்ளை, திருட்டு மற்றும் வழிப்பறியில் புகழ் பெற்றிருந்தனர். பாவச் செயல்களும், அக்கிரமம் செய்வதும் அவர்களுக்கு சங்கில் ஊட்டப்பட்டிருந்தது. ஒருவரைக் கொலை செய்வது அவர்களைப் பொறுத்தவரை ஒரு இயல்பான நிகழ்வு. தாய்மார்களைத் திருமணம் செய்து கொள்வார்கள். எப்போதும் மது போதையில் மூழ்கி இருப்பார்கள். பெண் பிள்ளைகளை உயிரோடு புதைத்து விடுவார்கள். பெண்களைக் கால்நடைகளை விடக் கேவலமாக நினைத்தார்கள். மிக மிக அற்பமான விஷயங்களுக்காக தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வார்கள். சில வேளைகளில் அது ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும்.

சுருக்கமாக, அவர்களுக்கு எந்தவொரு நல்லொழுக்க உயர்வும் இருக்கவில்லை; பண்பாட்டு உயர்வும் இருக்க -வில்லை; அரசியல் உயர்வும் இருக்கவில்லை; மார்க்கத்தின் மீதும் அவர்களுக்கு எந்த ஈடுபாடும் இருக்கவில்லை. ஆனால், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் மற்றும் திருக்குர்ஆனின் பரக்கத்தால் அவர்கள் சில நாள்களிலேயே உலகத்தின் போதகர்களாகவும், ஆசிரியர்களாகவும் ஆகி விட்டார்கள். மேலும், ஒரு புதிய நாகரிகம் மற்றும் பண்பாட்டிற்கு அடித்தளம் இட்டார்கள். கைசர் மற்றும் கிஸ்ராவின் அரசாங்கங்களும் அவர்களுடன் மோதியபோது, சுக்குநூறாகிப் போயின. பிறகு, அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் அறிவுகளின் ஆறுகளைப் பெருகச் செய்தார்கள்.


முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வரலாற்று அறிவு என்பது என்னவென்று அரேபியர்களுக்குத் தெரியாது. இலக்கணம் மற்றும் மொழிப் பகுப்பாய்வு அறிவு எவை என்றோ, ஃபிக்ஹ் (எனும் மார்க்கச் சட்டம்), மார்க்கச் சட்டத்தின் விதிகள் என்றால் என்ன என்றோ தெரியாது. அல்லது விளக்கவுரை அறிவு மற்றும் சொற்பொழிவு என்றால் என்னவென்று தெரியாது. திறமை மற்றும் சொற்செறிவு என்றால் என்னவென்று தெரியாது. அல்லது பொருளியல் அறிவு என்றால் என்னவென்று தெரியாது. அல்லது இறையியல் என்றால் என்ன என்று தெரியாது. ஆனால், திருக்குர்ஆன் இறங்கிய பிறகு, அல்லாஹ் இதே நாடோடிகள் மற்றும் ஒட்டகங்கள் மேய்ப்பவர்கள் மூலம் உலகில் இந்த எல்லா அறிவுகளையும் பரப்பி விட்டான். அதே போல், கட்டுமானக் கலை, கம்பளம் நெய்தல் மற்றும் கட்டிடங்களின் மீது வண்ணங்கள் கொண்ட பூக்கள் வரைதல் ஆகியவற்றையும் ஐரோப்பா, முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக் கொண்டது. இன்று முழு நாகரிகமான உலகின் கவனஈர்ப்பு மையமாக உள்ள இசைக்கலையின் உருவாக்கமும் முஸ்லிம்களையெ சாரும். இந்த உண்மையை ஐரோப்பிய எழுத்தாளர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதே போல், தத்துவம் ஐரோப்பாவின் கண்டுபிடிப்பு என்று எண்ணப்படுகிறது. ஆனால், ஒரு ஐரோப்பிய தத்துவவாதி எழுதியுள்ளார்: "இது முற்றிலுமாகப் பொய் ஆகும். தத்துவத்திலும் நாங்கள் முஸ்லிம்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்". சுருக்கமாக, திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு எந்த அளவிற்கு மகிமை அளித்தது என்றால், எந்த அளவிற்கு உயர்வு அளித்தது என்றால், அவர்கள் உலகின் போதகர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஆகி விட்டார்கள்." (த:ஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்கம் 366)

எவர்களின் பார்வை நிலத்தின் மீது மட்டுமே இருந்ததோ, எவர்கள் வானத்தைப் பற்றி அறியாதவர்களாக இருந்தார்களோ, அவர்களையும் இறைவனுடன் கொண்டு சேர்த்தது. அத்தகைய நேர்வழியைக் காட்டியது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இறைமறையின் உண்மையான நோக்கம் இதுவாகவே இருக்க வேண்டும். அதாவது, அது தன்னைப் பின்பற்றுபவருக்குத் தன் போதனை, தாக்கம், சீர்திருத்த ஆற்றல் மற்றும் தன் ஆன்மிகத் தனிச்சிறப்பு மூலம், ஒவ்வொரு பாவம் மற்றும் மாசடைந்த வாழ்விலிருந்து விடுவித்து, ஒரு தூய வாழ்வை நல்க வேண்டும். மேலும், தூய்மைப்படுத்திய பிறகு, இறைவனை அடையாளம் காண்பதற்கு ஒரு முழுமையான மெய்யறிவையும் நல்க வேண்டும். மேலும், அனைத்து மகிழ்ச்சிகளின் தலையூற்றான அந்த இணையற்றவனுடன் அன்பு மற்றும் நேசத்தின் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில், உண்மையில், இந்த அன்புதான் ஈடேற்றத்தின் வேர் ஆகும். மேலும், இதுவே அந்த சுவனம்ஆகும். இதனுள் நுழைந்த பிறகே, அனைத்து சோர்வு, கசப்பு, துன்பம் மற்றும் வேதனை ஆகியவை அகன்று விடுகின்றன... எனவே, நான் ஒவ்வொருவருக்கும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகிறேன்: இந்தத் தேவைகளை முழுமை செய்யும் நூல், திருக்குர்ஆன்ஆகும்." (சஷ்மயே ம:ரி:ஃபத், ருஹானீ கஸாயின், தொகுதி 23, பக்கங்கள் 305, 309)

தற்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மூன்றாவது கலீ:ஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் சிறப்பு துஆக்களை ஏற்று அருள் புரிந்தவாறு, ஸ்வீடனின் தலைநகர் ஸ்டாக்ஹோமில் டிசம்பர் 10, 1979-இல் புரொ:ஃபெஸ்ஸர் டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிப் அவர்களுக்கு இயற்பியல் துறையில் நோபல் பரிசை அருளினான். உண்மையில்,




ஐன்ஸ்டீன் ஈர்ப்பு விசையை மின் விசையுடன் ஒருங்கிணைக்க பெரும் முயற்சி செய்தார். டாக்டர் அப்துஸ்ஸலாம் அவர்கள், ஷெல்டன் கிளாஷோ மற்றும் ஸ்டீவன் வைன்பெர்க் ஆகியோர் தனித்தனியே பணியாற்றி, வலுவற்ற அணுவாற்றலையும், மின் காந்த விசையையும் ஒருங்கிணைத்தார்கள். இதற்கு Unified Electroweak Theory (அதாவது, ஒருங்கிணைந்த பலவீனமான மின்காந்தக் கோட்பாடு) என்று பெயர். (பெஹ்லா அஹ்மதி சாயின்ஸ்தான் - முதல் அஹ்மதி அறிவியலறிஞர்)

அன்று இரவு டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிப் அவர்களுக்கு ஸ்வீடன் அரசருடனும், அரசியுடனும் விருந்து உண்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அதில் 4000 விருந்தினர்களுக்கு முன்னால் ஒவ்வொரு துறையிலும் பரிசு பெற்றவர்கள் சார்பில் ஒவ்வொரு பிரதிநிதி என மூன்று மூன்று நிமிடங்கள் உரை நிகழ்த்துகிறார்கள். இந்த அழகான, கண்ணியமான நிகழ்ச்சி கடந்த 88 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் அரங்கேறி வருகிறது. ஆனால், இன்று முதல் முறையாக இங்கு திருக்குர்ஆன் திலாவத் செய்யப்பட்டது. தம்முடன் இருந்தவர்களின் விருப்பத்தின் பேரில், டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிப் அவர்களே இயற்பியலில் பரிசு பெற்றவர்களின் சார்பில் ஒரு சிறப்பான உரை நிகழ்த்தினார்கள். துவக்கத்தில் அவர்கள் சூரா அல் முல்க்கின் 4 மற்றும் 5 ஆகிய வசனங்களை ஓதினார்கள்.

பிறகு, நோபல் ஃபவுண்டேஷன் மற்றும் Royal Academy of Sciences-க்கு நன்றி தெரிவித்ததை அடுத்து, அவர்கள் கூறினார்கள்: "இயற்பியலின் ஆராய்ச்சி அனைத்து மனித

குலத்தின் பொதுவான சொத்து ஆகும். கிழக்கும் மேற்கும், வடக்கும் தெற்கும் அனைத்தும் இதில் சமமாக பங்கு பெற்றுள்ளன.”

இஸ்லாத்தின் புனித நூலில் அல்லாஹ் கூறுகிறான்: “நீங்கள் ரஹ்மானின் படைப்பில் எந்த வகையான ஒழுங்கீனத்தையும் காண மாட்டீர்கள். உங்களுக்கு எங்காவது ஏதேனும் குறை தென்படுகிறதா என்று மீண்டும் திரும்பிப் பாருங்கள். மீண்டும் மீண்டும் உற்றுப் பாருங்கள். உங்கள் பார்வை சோர்வடைந்து, தோல்வியுடன் திரும்பி வரும்.” திருக்குர்ஆனை இறைவனின் கூற்றாகவும், அறிவியலை இறைவனின் செயலாகவும் உறுதி கொண்டதே



டாக்டர் ஸலாம் அவர்களின் வெற்றிகளின் இரகசியமாகும். எப்பொழுதும் தம் உரைகளில், அறிவியல் அறிவுகளைக் கற்பதனை வலியுறுத்தும் திருக்குர்ஆனின் கட்டளைகளை முன்வைத்து வந்தார்கள். இதனாலேயே, மற்ற அறிவியல் அறிஞர்கள் பல ஆண்டுகள் எடுத்து எட்டும் முடிவுகளை அவர்கள் விரைவில் அடைந்து வந்தார்கள்.

இவ்வாறே, புரொ∴பெஸ்ஸர் டாக்டர் ஹா∴பிஸ் சாலிஹ் முஹம்மத் அலாஹ்தீன் சாஹிப், சிக்கந்தராபாத் -தைச் சேர்ந்த அவர்களின் ஆராய்ச்சி கூட திருக்குர்ஆனின் சந்திர, சூரிய கிரகணம் பற்றிய முன்னறிவிப்பை உள்ளடக்கியிருந்தது. அவர்கள் WORLDS EMINENT SCIENTISTS (உலகின் முக்கிய அறிவியலறிஞர்கள்) பட்டியலில் 100 ஆவது இடத்தில் எண்ணப்பட்டார்கள்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவர்களைப் பற்றி கூறினார்கள்: “அறிவியலை எப்போதும் திருக்குர்ஆனுக்குக் கட்டுப்பட்டதாகவே வைத்தார்கள்...... தம் அறிவியல் கட்டுரைகளுக்கான சான்றை எப்போதும் திருக்குர்ஆன் வசனங்களில் இருந்தே விளக்கிக் கூறி வந்தார்கள்.... இதில் அவர்கள் பெரும் திறமை கொண்டிருந்தார்கள்.” (குத்பா ஜுமுஆ: மார்ச் 25, 2011)

இன்று உலகின் வெற்றியிலும், முன்னேற்றத்திலும் முக்கியப் பங்களிக்கும் அறிவியலுக்குத் திருக்குர்ஆன் ஒரு முழுமையான வழிகாட்டியாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “சுருங்கக் கூறின், ஐரோப்பாவிடம் ஒன்றும் இருக்கவில்லை. அது கற்றதெல்லாம் ஸ்பெயினின் முஸ்லிம்களிடமிருந்து கற்றது. ஸ்பெயின் கற்றதெல்லாம் சிரியாவிடமிருந்து. சிரியா மக்கள் கற்றதெல்லாம் திருக்குர்ஆனிலிருந்து. எனவே, உலகின் அனைத்து ஞானங்களும் திருக்குர்ஆனிலிருந்தே வெளிப்பட்டன. இனி கியாமத் வரை எந்த அளவு எழுதுகோல்கள் இயங்குமோ திருக்குர்ஆனுக்குத் தொண்டு செய்வதற்காகவும், அது எடுத்துரைத்திருக்கும் ஞானங்களை வழக்கப்படுத்துவதற்காகவுமே இயங்கும்...... இவ்வாறே கலைகள் எவ்வளவு முன்னேறினாலும் சரி, அதன் பெருமை முஸ்லிம்களையே சாரும். முஸ்லிம்களின் தலை திருக்குர்ஆனுக்கு முன் குனிந்திருக்கும்.” (சூரா அல் அலக் -ன் விளக்கவுரை. த∴ப்ஸீரே கபீர் தொகுதி 13, பக்கம், 403, 2023 பதிப்பு)

இஸ்லாத்தின் முதல் காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போலவே, இறுதிக் காலத்திலும் திருக்குர்ஆனால் தாக்கம் பெற்று, இஸ்லாம் மற்றும் ஈமான் எனும் செல்வத்தால் நிறைவு பெற்று, மார்க்க, பௌதிக, இவ்வுலக, மறுவுலக வாழ்வில் வெற்றி மற்றும் ஈடேற்றம் பெறுபவர்கள் எண்ணற்ற நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் உள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் லூதியானாவில் தங்கியிருந்த வேளையில், மௌலவி குலாம் நபி சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் இருப்பிடத்திற்கு வெளியே மக்கள் கூட்டத்தை அழைத்து வருகிறார் அது அன்னாரைப் பற்றித் தீய சொற்களைப் பயன்படுத்துகிறது. ஒருநாள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுடன் உரையாடியபோது, “உறுதியாகவே திருக்குர்ஆன் தங்களுடனேயே உள்ளது” என்றுகூறினார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், “திருக்குர்ஆன் என் பக்கமே இருக்கிறது என்றால், பிறகு மௌலவி சாஹிப் நீங்கள் யார் பக்கம் இருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள். அதற்கு அவர் உடனடியாக, தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் பக்கம் இருப்பதாக பதில் அளித்தார். அப்போதே மௌலவி சாஹிப் பைஅத் செய்து, ஹுஸூர் (அலை) அவர்களின் நேசராகி விட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “நினைவில் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன் உண்மையான பரக்கத்துகளின் தலையூற்றும், ஈடேற்றத்தின் உண்மையான வழியுமாகும்...... முஸ்லிம்கள் இதன்படி அமல் செய்திருக்க வேண்டும்...... பிறகு, பாருங்கள்! இறைவன் எவ்வாறு அவர்களின் இன்னல்கள் மற்றும் சிரமங்களை அகற்றுகிறான் என்று...... உறுதியாகவே நினைவில் கொள்ளுங்கள்! எவர் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்கிறாரோ, அவனுடைய தூய மறையின்படி அமல் செய்கிறாரோ, மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுகிறாரோ, அல்லாஹ் அவருக்கு முடிவற்ற பரக்கத்துகளில் பங்கு அளிக்கிறான். இவ்வுலகின் அருட்கொடைகளைக் காட்டிலும் மிகவும் மேம்பட்ட பரக்கத்துகள் அவருக்கு வழங்கப் -படுகின்றன.” (மல்∴பூஸாத், தொகுதி 7, பக்கம் 181)

மேலும் கூறுகிறார்கள்: “இஸ்லாத்தின் கோட்பாடுகளை விட்டு விட்டு, ஒரு காட்டுமிராண்டி உலகை மனிதர்களாகவும், மனிதர்கள் என்ற நிலையிலிருந்து இறை மக்களாகவும் ஆக்கிய திருக்குர்ஆனை விட்டு விட்டு, உலகத்திற்குப் பின்னால் செல்லும் ஒரு கூட்டத்தைப் பின்பற்றுவது எவ்வளவு

கொடுமை! எந்த மக்கள் மேற்கத்திய உலகை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டு, இஸ்லாத்தின் மேன்மை மற்றும் வாழ்வை விரும்புகிறார்களோ, அவர்களால் வெற்றி பெற முடியாது. திருக்குர்ஆனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களே வெற்றி பெறுவார்கள். திருக்குர்ஆனை விட்டு விட்டு வெற்றி என்பது ஓர் இயலாத மற்றும் சாத்தியமற்ற செயல் ஆகும். இத்தகைய வெற்றி ஒரு கற்பனையான விஷயம் ஆகும். அதனைத் தேடி இந்த மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். சஹாபா (ரழி) உடைய முன்மாதிரிகளை உங்களுக்கு முன்னால் வையுங்கள். பாருங்கள்!..... அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டிருந்தார்கள். திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதில், கீழ்ப்படிதலில் இரவு பகலாக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். கா∴பிர்கள் என்று சொல்லப்பட்ட மக்களின் எந்தவொரு சடங்கு மற்றும் வழக்கத்தைக் கூட (சஹாபிகளான) இவர்கள் பின்பற்றவில்லை. இஸ்லாம் இந்த நிலையில் இருந்த வரை, அது முன்னேற்றம் மற்றும் உயர்வின் காலமாக இருந்தது..... முஸ்லிம்கள் திருக்குர்ஆன் பக்கம் திரும்பாத வரை, அவர்களிடையே அந்த ஈமான் உருவாகாது. அவர்கள் நலம் பெற மாட்டார்கள். மதிப்பும் உயர்வும், முதலில் வந்த அந்த வழியாகவே மீண்டும் வரும்." (மல்∴பூஸாத், தொகுதி 2, பக்கங்கள் 157,158)

எனவே, நாம் திருக்குர்ஆனின் திலாவத்துக்கான உரிமையை வழங்கி, அதன் போதனைகள்படி அமல் செய்யும் வரை, உலகின் எந்தவோர் ஆற்றலாலும், உலகின் எந்தவோர் அணு ஆயுதத்தாலும் நம்மைத் தோற்கடிக்க முடியாது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: "திருக்குர்ஆன் வழங்கப் பெற்றவர்களே! திருக்குர்ஆனை ஓதாமல் உறங்காதீர்கள். மேலும், அதை எப்படி ஓத வேண்டுமோ அப்படி அதை இரவிலும் பகல் வேளையிலும் ஓதிடுங்கள். அதைப் பரப்பிடுங்கள். மேலும், அதை அழகாக ஓதி வாருங்கள். மேலும், நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அதன் கருத்துகளை ஆழ்ந்து சிந்தித்திடுங்கள்." (ரவாஹுல் பைஹக்கீ ∴பீ ஷிஅபில் ஈமான். சான்று நூல்: மிஷ்காத்துல் மஸாபீஹ் கிதாபுல் ∴பஸாயில், கிதாபு ∴பஸாயிலுல் குர்ஆன். ஹதீஸ் எண் 2210)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் ஓர் அறிவுரையை முன் வைத்து நான் எனது விண்ணப்பங்களை நிறைவு செய்கிறேன். ஒளி நிறைந்த ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: "ஓர் அஹ்மதி குறிப்பாக, இதை நினைவில் கொள்ள வேண்டும்! அதாவது, அவர் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அதில் ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டும். எங்கு புரியவில்லையோ அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அளித்த விளக்கங்கள் அல்லது அதே அடிப்படைகளைக் கடைபிடித்தவாறு, மேற்கொண்டு விளக்கம் அளித்தவாறு கலீ∴பாக்கள் வழங்கிய விளக்கங்கள் இருக்கின்றன. அவற்றை அவற்றிற்கேற்ப புரிய வேண்டும். பிறகு, அதன்படி அமல் செய்ய வேண்டும்...... ஏனென்றால், திருக்குர்ஆனுக்கு கண்ணியம் அளிப்பவரே இப்பொழுது வானத்தில் கண்ணியம் பெறுவார். மேலும், திருக்குர்ஆனின் அனைத்துக் கட்டளைகளின்படி அமல் செய்வதே திருக்குர்ஆனுக்கு கண்ணியம் அளிப்பது ஆகும்...... எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இதைப் பற்றி கவலைப்பட வேண்டும். அதாவது, அவர் தானும், அவருடைய மனைவி மக்களும் திருக்குர்ஆனைப் படித்தல் மற்றும் அதைத் திலாவத் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். (ஜுமுஆ குத்பா: 24 செப்டம்பர் 2004, குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 2 பக்கம், 686,687)

*திருக்குர்ஆனை மனதில் வைத்திருங்கள்.*
*தூய்மையான கொள்கைகளைக் கொண்டிருங்கள்.*
*திரும்பிச் செல்லும் இடத்தைப் பற்றி கவலை கொள்ளுங்கள்.*
*மறுமைக்குத் தேவையானதை உங்களிடம் வைத்திருங்கள்.*
*அன்பர்களே! இது அமிர்தம் ஆகும்.*
*நேர்மையாகவும், உண்மையாகவும் இருந்திடுங்கள்.*
*என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் தூயவனே!*
*இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக!*

அல்லாஹ் நம் அனைவருக்கும் திருக்குர்ஆனின் போதனைகள்படி செயல்பட்டு, மார்க்கம் மற்றும் உலகத்தில் ∴பலாஹ் (எனும் வெற்றி) மற்றும் உண்மையான நஜாத் (அதாவது ஈடேற்றம்) பெறுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகின்றார்கள்:**

**"எவர் பயணியாகவோ நோயாளியாகவோ இருக்கும் நிலையில் ரமலான் மாதத்தில் நோன்பு வைக்கின்றாரோ அவர் இறைவனின் தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்றார். அல்லாஹ், பயணியும் நோயாளியும் நோன்பு வைக்க வேண்டாம் என்று தெளிவாகக் கூறி விட்டான். நோயிலிருந்து விடுபட்டு உடல் நலம் கிடைத்த பிறகு நோன்பு நோற்க வேண்டும். பயணம் முடிந்த பிறகு அவர் நோன்பு நோற்க வேண்டும். ஏனெனில், இரட்சிப்பு இறைவனின் அருளால்தான் கிடைக்க முடியும். தனது செயல்களின் வலிமையைக் காட்டி ஒருவர் இரட்சிப்பைப் பெற முடியாது."**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் – ஜுமுஆ பேருரை 03.06.2016

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



5

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

நான் இது தொடர்பாக துஆ செய்தேன். மேலும் சந்தேகமின்றி, எனது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கிறது. எனவே எழுதும் திறமை கொண்ட முதியவரோ அல்லது இளைஞரோ இந்தத் த.ஃப்ஸீருக்கு பதில் எழுதுவதற்கான ஆற்றலை ஒருபோதும் பெற மாட்டார். சந்தேகமின்றி, இந்தத் த.ஃப்ஸீர் இறைஞானங்களின் கருவூலமும், அதன் நகரமும், உண்மைகளின் தண்ணீரும், ஈரமான மண்ணும் ஆகும். கோர்வையாக இருப்பதைப் பொருத்தவரை எல்லையற்ற நுட்பமானதாகவும், உருவாக்கப்-பட்டிருப்பதைப் பொருத்தவரை மிகவும் அருமையான ஞானங்களால் கட்டமைக்கப்பட்டதும், சொற்கள் உயர்ந்த கோணத்திலும், சுருக்கமான சொற்களாக இருந்தாலும் அதிக பொருள்களைக் கொண்டவையாகவும், தெளிவாக எடுத்துரைப்பவையாகவும், உயர்ந்த மகத்துவமிக்கவை-யாகவும் இருக்கின்றன.

நான் இந்தத் த.ஃப்ஸீரை எனது வல்லமையால் எழுதவில்லை. நானோ ஒரு பலவீனமான அடியான் ஆவேன். அவ்வாறே எனது கூற்றும் பலவீனமானதாகும். ஆனால் இந்தத் த.ஃப்ஸீருக்கான கருவூலத்தின் திறவுகோல்கள் என்னிடம் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதில் அடங்கியுள்ள இந்த இரகசியங்கள் அவனிடமிருந்தே எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அல்லாஹ்வும், அவனுடைய கண்ணியத்தின் நுட்பங்களுமே ஆகும். நான் (இந்த நூலாகிய) இதில் பலவிதமான ஞானங்களைத் தொகுத்தேன். மேலும் அவற்றை சீரமைத்திருக்கிறேன். சிதறிய நுணுக்கமான விஷயங்களை வரிசை வரிசையாக அடுக்கி வைத்தேன். மேலும் அவற்றிக்கு கடிவாளமிட்டேன். எவர் அதை அடையாளம் கண்டு கொண்டாரோ, அவர் திருக்குர்ஆனை அடையாளம் கண்டு கொண்டார். எவர் அதை பொய் என்று கருதினாரோ, அவர் பொய் கூறினார். இதில் இறைஞானத்தின் புத்தம் புதிய கனிகள் இருக்கின்றன. சூரா ஃபாத்திஹாவின் புகழுக்குரிய ஃபுர்கானின் நுண்ணிய கருத்துகள் இருக்கின்றன. இதில் அடையாளங்கள் மற்றும் இரகசியங்களின் நகரமும், கோட்டைகளும் குடியிருக்கின்றன.

(சூரா ஃபாத்திஹா ஆகிய இதில்) உண்மைகளின் களமும், மலைப் பகுதியும் இருக்கின்றன. அகப் பார்வையின் நீரூற்றுகளும், அகப் பார்வையின் கண்களும் இருக்கின்றன. சான்றுகள் எனும் குதிரை வீரர்களும் அவர்களின் வாகனங்களும் இருக்கின்றன. இவையெல்லாம் (சூரா ஃபாத்திஹாவாகிய) أُمُّ الْكِتَاب (உம்முல் கிதாப் - வேதத்தின் தாய்) என்பதன் அருள்களைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. (அடியாரின் பக்கம் அதிகமாகத் திரும்புபவன் எனும்) تَوَّاب (தவ்வாப்) ஆகிய என் இறைவன் (எனக்குப்) புரிய வைத்த பின்னர் நான் இவற்றைப் பற்றிப் புரிந்தேன். இது எத்தகைய சூரா என்றால், இதன் களத்தை வாகனங்களை அதி விரைவாக ஓட்டி, பலவீனப்படுத்தினாலும் கடந்து சென்று விட முடியாது. நட்சத்திரங்களின் ஒளியும் இதன் ஒளியை அடைய முடியாது.

இந்த அநீதியிழைப்பவர்கள் தோல்வியை என்னுடன் தொடர்புபடுத்திக் கூறியபோது, நான் கடைப்பற்களிலிருந்தும், கூரிய பற்களிலிருந்தும் என்னை நானே விடுவிப்பதற்காக அவர்களின் பொய்க் கூற்று என்னை சூரா ஃபாத்திஹாவின் த.ஃப்ஸீரை எழுதக் கட்டாயப்படுத்தியது. இட்டுக்கட்டிக் கூறும் ஒரு பெரும் பொய்யரின் தாக்குதலை விட நாய்களின் தாக்குதல் குறைவானதாகும். (த.ஃப்ஸீர் ஆகிய) இது அல்லாஹ்வின் அருளாலும், அவனது கருணையாலும் ஆகும். இது நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஓர் அடையாளமாகவும், மறுப்பவர்களுக்கு ஏக்கமாகவும், எதிர்த்து நிற்கும் ஒவ்வொருவருக்கும் மறுமை நாள் வரை சான்றாகவும், இறையச்சம் கொண்டவர்களுக்கு நேர்வழியாகவும் இருக்கும் பொருட்டு அமைந்திருக்கிறது. வெற்றி என்பது நேரிய பேச்சினால் கிடைக்கிறது; முட்டாள்களைப் போன்று, வெற்றுப் பேச்சினால் அல்ல என்பது மக்களுக்குத் தெரிவதற்காகவும் இது நடந்தேறி இருக்கிறது.

வெற்றி என்பது உள்ளத்தின் பரிசுத்தத்தால் கிடைக்கிறது. சிறுநீரையும், மலத்தையும் போன்ற அசுத்தமான வாயினால் அல்ல. மேலும் நிலைமைகளின் சீர்திருத்தம் என்பது அறிவையும், மேன்மையையும் கொண்ட ஆயுதங்களால் கிடைக்கிறது; தந்திரம், ஏமாற்றுதல், பெருமையடித்தல், அகங்காரம் கொள்ளுதல் ஆகியவற்றால் கிடைப்பதில்லை. தந்திரத்தின் மூலமாகவும், வஞ்சகத்தின் மூலமாகவும் வெற்றி பெற விரும்புபவர்களுக்கு அழிவுதான்! அவர்கள் வேட்டையாடுபவரைப் போன்று வேட்டையாடும் மறைவான இடத்தில் உட்கார்ந்து கொண்டு வேட்டைக்காக பதுங்கிக் கொண்டிருக்கின்றனர். மேலும் வெற்றி என்பது أَحْكَمُ الْحَاكِمِين (அஹ்கமுல் ஹாகிமீன் - தீர்ப்பளிப்பவர்களி

-லெல்லாம் மிகச் சிறந்த தீர்ப்பளிப்பவன்) இடமிருந்தே வருகின்றது. தான், விரும்புபவருக்கு அவன் உதவி செய்கிறான். மேலும் அவன் (நல்லவர்கள் எனும்) சாலிஹுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்பவனாகி விடுகின்றான்.

எனவே (இறைவன் வழியில்) காயப்படுத்தப்பட்ட அவர்கள், உடல் நலம் பெற்று விடுகின்றனர். மேலும் களைப்படைந்த அவர்கள் ஓய்வைப் பெறுகின்றனர். அவர்களின் கம்பீரத்திற்கு பின்னடைவும் இல்லை; அவர்களின் விளக்குகள் அணைவதுமில்லை. தண்ணீரால் நிரப்பியிருக்கும் வாளி, கயிற்றின் முடிச்சு வரை இருப்பது போன்று அல்லாஹ்வினால் ஆதரவளிக்கப்பட்டவர்கள் புகழப்பட்ட ஃபுர்கானினாலும், அரபு மொழியின் ஞானத்தாலும் நிரப்பப்படுகின்றனர். மேலும் அது நான் ஆவேன். இதில் எனக்கு எந்தப் பெருமையும் இல்லை. எனது துஆ கல்லை மெழுகுவர்த்தியாக்கி விடுகிறது. எனது இந்த நாள் இருண்ட இரவுக்குப் பிறகுள்ள வெற்றி மற்றும் ஒளியின் நாளாக இருக்கிறது.

இன்று முட்டாள்தனமான பேச்சுகளைப் பேசுபவர்கள் ஊமையாகி விட்டனர். மேலும் அவர்கள் திருப்பி எழுப்பப்படும் நாள் வரை அவர்களின் கைகள் கட்டப்பட்டு விட்டன. ஒரு யாசகர் வீதிகளிலும், தெருக்களிலும் சுற்றித் திரிவதைப் போன்று நான் (திருக்குர்ஆனின்) இந்த தாள்களைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். எனவே அல்லாஹ் காட்ட இருந்ததைக் காட்டினான். அருந்த வைக்க விரும்பியதை அருந்தச் செய்தான். மேலும் அவன் எனக்கு நேர்வழி காட்டியதற்கு ஏற்ப நான் (திருக்குர்ஆனின்) அந்த வழிகளைப் பெற்று விட்டேன். மேலும் நான் கேட்டது எனக்குக் கொடுக்கப்பட்டது; எனக்கு திறக்கப்பட்டது; நான் நுழைந்து விட்டேன்.

நான் எழுதியதெல்லாம், எல்லாம் அறிந்த இறைவனின் اَنْفَاسِ قُدُسِيَّه (அன்ஃபாஸே குத்ஸிய்யா) எனும் பரிசுத்தமானவன் அறிவித்தது என்ற அருளால் மட்டுமே தவிர, எழுதுகோல்கள் எனும் குதிரைகளை ஓட்டியதால் அல்ல. நான் மற்றவர்களை விட அதிக ஆலிம் (அறிஞர்) ஆவேன் என்றோ, எனது ஓட்டமெல்லாம் அவர்களை விட அதிகமானது என்றோ நான் கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை. அல்லது எனது ஆன்மா இலக்கிய அறிஞர்களைச் சேர்ந்தவர்களாக இருந்த அந்த இளைஞர்களின் ஆன்மாக்களுடன் சேர்ந்திருக்கிறது என்றும் நான் கூறவில்லை. அல்லது நான் கட்டுரையாளரின் அழகிய சொற்றொடர்களைப் பற்றி முழுமையான திறமையைப் பெற்று விட்டேன் என்றும் நான் கூறவில்லை. இலக்கியத்தின் முழுமைத்தன்மை எனும் களத்தில் நான் இறுதி எல்லை வரை சென்றடைந்து விட்டேன் என்பதும் எனது வாதமல்ல. அல்லது நான் அருமையானதும், தேர்ந்தெடுக்கப்பட்டதுமான பொருள்களின் செழிப்பான, புத்தம் புதிய கனிகளை சுவைத்திருக்கிறேன் என்றும் நான் கூறவில்லை. அவ்வாறன்று. மாறாக, திரைக்குள் இருந்த, இலக்கியத்தில் புலமை பெற்றிருந்தவர்களுக்கு அழைப்பு விடுத்தேன். அப்போது அதன் இள வயதினர் என்னிடம் வந்தனர். எனவே அந்த இளைஞர்கள் மகிழ்ச்சியான உதடுகளுடனும், மிளிரும் முகங்களுடனும் அவற்றை ஏற்றுக் கொண்டு விட்டனர்.

எனவே என்னிடம் அந்த இலக்கிய அறிஞரைப் பற்றிய செய்தியைக் கேட்காதீர். நான் இலக்கியம் எனும் நகரத்தில் ஒரு பயணியைப் போன்றவன் ஆவேன். என்னிடம் நீங்கள் பார்ப்பதெல்லாம் என் இறைவனின் ஆதரவு மட்டுமே ஆகும்.




எந்த ஓரிறைவனுக்கு முன்னால் நான் எனது கழுத்தை வைத்து விட்டேனோ அவனிடமிருந்துள்ளது ஆகும். மேலும் எனது ஒவ்வொரு தேவையையும் அவனிடம் எடுத்து வைத்து விட்டேன். அவன் மறுமையிலும், இந்த உலகிலும் எனது அன்பிற்குரியவன் ஆவான். நிச்சயமாக நான் அவனுடைய மஸீஹ் ஆவேன். இறைவனுடைய பாதுகாப்பின் அரண் எனது வாகனம் ஆகும். மேலும் அவனுடைய கருணை எனது பொதி சேணம் (ஆதரவு) ஆகும். அல்லாஹ்வின் அருளும், அவனுடைய கருணையும் இல்லாதிருந்தால், எனது கூற்று, இரவில் நல்லதையும், தீயதையும் ஒன்று சேர்க்கும் விறகைப் போன்று அல்லது வெள்ளத்தின் குப்பைக் கூளங்களைப் போன்று இருந்திருக்கும்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது சொந்த ஒளிமிக்க இயல்பின் காரணத்தால் இந்த தஃப்ஸீரை எழுதுவதற்கு ஆற்றலுடையவனாகவில்லை. மாறாக, இது அல்லாஹ்வின் கருணையாலும், அருளாலும் கிடைத்திருக்-கிறது. திரையிட்டிருக்கும் முகத்திலிருந்து திரை விலகுவது குறைபாடுள்ள எனது கைகளால் ஏற்படவில்லை. மாறாக, இது அல்லாஹ்வின் அருள் மற்றும் எல்லையற்ற அருட்கொடையால் ஏற்பட்டது. ஏனெனில் அவன் இஸ்லாத்தை, காடுகளில் கிடக்கின்ற, வாழ்வின் எந்த அடையாளமும் இல்லாத நோயாளியைப் போன்றும், பாலைவனத்தின் காய்ந்த விறகுகளைப் போன்று கல்லில் கிடப்பது போன்றும், அதன் மீது அவமானவும் இழிவும் ஏற்பட்டது போன்றும், அதன் ஆடை கிழிந்ததாக இருப்பதைப் போன்றும் பார்த்தான். பின்னர் அல்லாஹ் வறட்சி காலத்தில் குறித்த நேரத்தில் பெய்யும் மழையைப் போன்று இஸ்லாத்திற்கு உதவி செய்ய வந்தான். மேலும் அதன் முகத்தைக் கழுவி விட்டான். அதன் மீது சுத்தமான தண்ணீரை ஊற்றி பல ஆண்டுகளாக இருந்த அசுத்தத்தை நீக்கினான்.

எனவே சான்றை நிறைவேற்றும் நோக்கத்தில் அல்லாஹ் தனது அடியார்களிலிலிருந்து ஓர் அடியாரை அனுப்பினான். மேலும் அவரது கூற்று நபி (ஸல்) அவர்களுடைய கூற்றின் நிழலாக ஆகி விடும் வகையில் அதில் அற்புதத்தை வைத்தான். அந்த நபி (ஸல்) அவர்களின் மீது ஆயிரக்கணக்கான சலவாத்தும், சலாமும் உண்டாவதாக.

மேலும் (அற்புதமான கூற்றாகிய) அதிலிருந்து அண்ட சராசரங்களைப் படைத்தவனின் கூற்றின் மகத்துவத்தில் எந்தக் குறையும் ஏற்படவில்லை. ஏனெனில் (அல்லாஹ்வின் சிறப்பான அருள்கள் எனும்) கராமத்துகள் முஃஜிஸாத்துக்களின் நிழல்களாகவே இருக்கின்றன. மேலும் இவ்வாறு எதிரிகள் திறம் படைத்த வேட்டைக்காரனைப் போல திட்டத்தைத் தீட்டிய போதெல்லாம், அல்லாஹ் அதை அழித்தும், நாசமாக்கியும் விட்டான். மேலும் அவர்கள் என்ன தந்திரத்தையும், ஏமாற்றத்தையும் உருவாக்கினாலும் அவன் அதை தகர்த்து விட்டான். அவர்கள் என்ன திட்டங்களைத் தீட்டினாலும் அவன் அவர்களை தோல்வியடையச் செய்து விட்டான். முன்னரே ஆயத்தம் செய்திருந்த அவர்களின் ஒவ்வோர் ஆயுதத்தையும் பின்னோக்கித் தள்ளி விட்டான். மேலும் அவர்கள் செய்த சதிகளையெல்லாம் வீணாக்கி விட்டான். அவர்கள் உறுதியாக உருவாக்கிய கோட்டைகளையெல்லாம் அவன் மண்ணோடு மண்ணாக்கி விட்டான். மேலும் அவர்கள் எந்த நெருப்பை மூட்டினாலும் அவன் அதை அணைத்து விட்டான். மேலும் அவர்கள் வெருண்டோட விரும்பியபோதெல்லாம் அவன் எல்லா வழிகளையும் அடைத்து விட்டான். அவ்வாறு அவர்கள் காலத்தின் ஆண்மகனைப் போன்று போட்டிக்கு வருவது அவர்களின் ஆற்றலுக்கு உட்பட்டதாக இருக்கவில்லை. அகழ்களையும், நகரத்தைச் சுற்றி கட்டப்பட்ட சுவரையும் தாண்டிக் குதித்து வெளியே சென்று விட அவர்களால் முடியவில்லை. அவர்களின் முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு முயற்சியும் பல்வேறுபட்ட தண்டனைகளின் மூலமாக தோல்வியுறச் செய்யப்பட்டு விட்டது. எதுவரையென்றால், அம்புக் கூட்டில் இருந்த அம்புகளின் கடைசி அம்பாக இருந்த இந்தத் தஃப்ஸீர் எழுதும் நேரம் வந்து விட்டது.




நாம் இந்த தஃப்ஸீரை கம்பீரமான அல்லாஹ்வின் அருளால் முழுமை செய்திருக்கிறோம். அது மலைகளை விட அதிக உறுதியாகவும், வலுவாகவும் வந்திருக்கிறது. கடினமான கற்களால் உருவாக்கப்பட்ட உறுதியான கோட்டையைப் போன்று ஆகி விட்டது. அது நன்றாக செயல்படுகின்ற அல்லாஹ்வின் புறமிருந்து அற்புதத்தின் எல்லை வரை சென்றடைந்து விட்டது. மேலும் இது இறை சந்நிதியிலிருந்து வெளியேற்றப்பட்டதும், வழிதவறிய பகைவனின் தீய எண்ணத்திலிருந்து பாதுகாப்பட்டதும் ஆகும். இதன் மூலமாக நான் பகைவர்களை ஓரளவுக்கு பழிவாங்கி இருக்கிறோம். மேலும் போர்க் களத்தில் அவர்கள் அமைத்த கூடாரத்தை, அவர்கள் நட்டிய பந்தலை நாம் பிடுங்கி விட்டோம்.

இந்த வேலை மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் அல்லாஹ் இந்தக் கடுமையான வேலையை எனக்காக எளிதாக்கி விட்டான். மேலும் தொலைவை எனக்கு அருகில் கொண்டு வந்து விட்டான். மேலும் பகைவர்களை விசாலமான பாதைகளிலிருந்து குறுகலான பாதைகளின் பக்கம் மாற்றி விட்டான். மேலும் அவர்களின் கண்களை குருடாக்கி விட்டான். மேலும் அறிவுகள் மற்றும் உண்மைகளிலிருந்து அவர்களின் வீரத்தை திருப்பி விட்டான். மேலும் அவர்களின் உள்ளங்களில் திகில் உணர்வை இட்டு விட்டான். மேலும் அவர்களின் பாவங்களின் காரணமாக அவர்களைப் பிடித்தான். அதனால் அவர்கள் தமது ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டனர். (அதாவது சரணடைந்து விட்டனர் - மொழிபெயர்ப்பாளர்).

மேலும் பால் கொடுக்கும் தமது ஒட்டங்களை அவர்கள் விட்டு விட்டனர். மேலும் கொஞ்சம் எஞ்சிய தனது தண்ணீரையும் செலவு செய்து விட்டனர். அவர்கள் தமது கூடாரங்களை கீழே விழச் செய்து விட்டனர். மேலும் தனது அம்புகளை வைக்கும் கூட்டை வெற்றிடமாக்கி விட்டனர். தனது வாள்களை உறைகளில் போட்டு விட்டனர். மேலும் இயலாமையின் காரணமாக தமது அகங்காரத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் தமது படையின் எல்லா ஆற்றல்களையும் அதாவது வாகனங்கள், காலாற் படைகள், பெருங்கூட்டங்கள், வீரமிக்க பெரும் படைகள், அணிகளாகத் திரண்டவர்கள், பயணியர் கூட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களின் நிலைமை அடக்கம் செய்யப்பட்ட ஓர் இறந்தவரைப் போன்று ஆகி விட்டது. அல்லது விளக்கின் எரிந்து விட்ட எண்ணையைப் போன்று இருந்தது. அதன் வெளிச்சம் எஞ்சியிருக்கவில்லை.

அவர்களின் சிறியவர், பெரியவர் எவர் போட்டிக்கு வந்தாலும் நாம் அவரை மவுனமாக்கி விட்டோம்; வாயடைக்கச் செய்து விட்டோம். அவர்களின் கழுதைகளை ஓட்டிச் செல்கின்ற ஒவ்வொருவரின் மீதும் பொதி சுமக்கும் சேணத்தை - அவை தன்னிடத்தில் இருந்து அசைய முடியாத அளவுக்கு அவற்றின் மீது போட்டு விட்டோம். அல்லது தமது தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து நுகத்தடியின் பக்கம் முகம் திருப்ப முடியாத அளவுக்கு ஆக்கி விட்டோம். இன்னும் கூறுவதென்றால், இந்த மக்கள் துவக்க காலத்திலிருந்து இன்று வரை களத்தில் இறங்கி நம்மை எதிர்த்து நிற்பதற்கு தைரியம் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் அனுபவப்பட்டிருக்கிறோம். பெண்களைப் போன்று அறைகளில் உட்கார்ந்து கொண்டு ஏசிப் பேசுவதைத் தவிர இவர்களுக்கு வேறு எந்த ஆற்றலும் இல்லை. அவர்கள் ஒவ்வொரு குறுகலான, அபாயம் நிறைந்த போர்க் களத்திலிருந்து வெருண்டோடி விடுகின்றனர். அவர்களின் மேலங்கியின் கீழிலிருந்து கிழிசல்கள் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிறகு அவர்கள் ஒப்புக் கொள்வதுமில்லை; வெட்கப்படுவதும் இல்லை. அல்லாஹ்வுக்கு பயப்படுவதில்லை; விலகுவதும் இல்லை.

இந்தத் தஃப்ஸீர், அவர்களுக்கு ஓர் அம்பாகவும், கூற்று ஒரு காயமாகவும் இருக்கிறது. ஒருவேளை இவ்வாறு அவர்கள் எச்சரிக்கையடைந்து, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடியவாறு குனியலாம். நம்மில் எந்த பிரிவினரும் எழுபது நாட்களை கடந்து விடக் கூடாது. எவர் அதை கடந்து விடுவாரோ அவருடைய தஃப்ஸீர் ஒருபோதும் ஒப்புக்

கொள்ளப்படமாட்டாது. அவர் பழித்துரைத்தலுக்குள்ளானவர் ஆவார் என்ற நிபந்தனையையும் நாம் இந்த த.்.ப்ஸீருக்காக விதித்திருக்கிறோம். அவ்வாறே அந்தத் த.்.ப்ஸீர் நான்கு பகுதிகளை விடக் குறைந்ததாக இருக்கக் கூடாது என்பதும் ஒரு நிபந்தனையாக இருந்தது. இந்த நிபந்தனைகள் எனக்கும் எனக்குப் போட்டியாக இருப்பவருக்கும் இடையில் சரிசமமாக இருந்தன. நாம் இந்த நிபந்தனைகளை முன்னரே வெளியிட்டு விட்டோம். மேலும் அச்சிட்டு எழுத்துப்பூர்வமாக அதை நண்பர்களுக்கும், பகைவர்களுக்கும் சென்றடையச் செய்து விட்டோம். இப்போது நாம் பேருதவி செய்பவனும், பேராற்றல் உடையவனுமாகிய அல்லாஹ்வின் உதவியால் த.்.ப்ஸீரை எழுதத் தொடங்குகின்றோம்.

உண்மையைத் தேடுபவர்களுக்கு கடினமாக இருக்கக் கூடாது என்பதற்காக நாம் இதை சில அத்தியாயங்களாகத் தொகுத்திருக்கிறோம். அத்துடன் கருத்தையே சிதைக்கும் அளவுக்கு சுருக்கமாகவோ, சலிப்படையும் அளவுக்கு நீண்டதாகவோ இருக்கக் கூடாது என்பதற்காக நாம் நடுநிலையான வழியை மேற்கொண்டுள்ளோம். (எனது த.்.ப்ஸீர் ஆகிய) இது (மஹ்ர் அலி ஆகிய) அவருக்கு இந்த எளியவனிடமிருந்து ஒரு வயது முதிர்ந்த தந்தையின் கடைசி குழந்தை கண்ணியத்திற்குரிய இறைவனின் கருணையால் இறை நியதி எனும் கருப்பையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டதைப் போன்ற ஒன்றாகும். இந்தத் த.்.ப்ஸீர் நோன்பின் அருளுக்குரிய மாதத்தில் அதன் கருணையின் இரவுகளில் இயற்றப்பட்டது.

நான் இதற்கு, اِعْجَازُ الْمَسِيْحِ فِيْ نَمَقِ التَّفْسِيْرِ الْفَصِيْحِ (இ.்.ஜாஸுல் மஸீஹி .்.பீ நமகித் த.்.ப்ஸீரில் .்.பஸீஹ்) என்று பெயர் வைத்திருக்கிறேன். அதாவது 'எழுத்து வடிவில் கருத்தாழம் மிக்க விரிவுரை ஆகிய மஸீஹின் அற்புதம்'.

நான் அல்லாஹ்விடம், இந்தத் த.்.ப்ஸீரை ஆலிம்களுக்கு மு.்.ஜிஸா (எனும் இறைஅற்புதம்) ஆக ஆக்கி விடுவாயாக எனவும், எந்த இலக்கிய அறிஞருக்கும் இதற்கு நிகரானதைக் கொண்டு வருவதற்கான ஆற்றல் இருக்க வேண்டாம் எனவும், அவர்களுக்கு அதை எழுதுவதற்கு வாய்ப்பே கிடைக்க வேண்டாம் எனவும் செவ்வாய்கிழமை இரவு துஆ செய்தபோது, பெருமைக்குரிய இறைவனிடமிருந்து அந்த அருளுக்குரிய இரவிலேயே, நற்செய்தியைக் கொண்ட ஒரு கனவு எனக்குக் காட்டப்பட்டது. மேலும் எனது இந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டது. என் இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியவாறு, 'இந்த த.்.ப்ஸீரை எழுதுவதில் எவரும் உமக்குப் போட்டி போட இயலாது. இறைவன் எதிரிகளிடமிருந்து ஆற்றலை நீக்கி விட்டான்; அறிவை நீக்கி விட்டான்' என்று கூறினான். இதன் மூலமாக நான், எதிரிகள் இதற்கு ஆற்றல் பெற்றவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதையும், இதற்கு நிகரானதும், (சூரா .்.பாத்திஹாவின் கருத்துச் செறிவு மற்றும் உண்மைத்துவங்கள் எனும்) இந்த இரண்டு பண்புகளையும் உள்ளடக்கிய ஒரு த.்.ப்ஸீரை அவர்களால் கொண்டு வர முடியாது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். இந்த நற்செய்தி பேரருள் புரிகின்ற இறைவனிடமிருந்து திருக்குர்ஆன் இறக்கப்பட்ட ரமலானின் இறுதி பத்து நாட்களில் எனக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தக் காலகட்டத்தில் ஆற்றலும், வல்லமை-யுள்ளவனுமாகிய இறைவனின் உதவியால் இந்த த.்.ப்ஸீர் எழுதப்பட்டது.

என் இறைவா! நீ மக்களின் உள்ளங்களை (த.்.ப்ஸீர் ஆகிய) இதன் பக்கம் ஆர்வமூட்டுவாயாக. இதை அருளுக்குரிய நூலாக ஆக்குவாயாக. மேலும் இதன் மீது உன்னிடமிருந்து அருள்களை இறக்குவாயாக. நாம் உன் மீது தவக்குல் (நம்பிக்கை) வைத்தோம். எனவே நீ உன்னிடமிருந்து எமக்கு உதவி புரிவாயாக. மேலும் உனது கைகளால் எமக்கு ஆதரவளிப்பாயாக. மேலும் நீ முன்னிருந்த நல்லடியார்களை பராமரித்து வந்ததைப் போன்றே, எமது இந்த விவகாரத்தில் நீ எங்களைப் பராமரிப்பாயாக. எமது இந்த எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வாயாக. நாங்கள் உன்னிடம் மன்றாடலுடன் வந்து நிற்கின்றோம். எனவே உலகிலும் மார்க்கத்திலும் நீ எங்களுக்காக ஆகி விடுவாயாக. ஆமீன்.

(தொடரும்...)

நிச்சயமாக நான் அவனுடைய மஸீஹ் ஆவேன். இறைவனுடைய பாதுகாப்பின் அரண் எனது வாகனம் ஆகும். மேலும் அவனுடைய கருணை எனது பொதி சேணம் (ஆதரவு) ஆகும். அல்லாஹ்வின் அருளும், அவனுடைய கருணையும் இல்லாதிருந்தால், எனது கூற்று, இரவில் நல்லதையும், தீயதையும் ஒன்று சேர்க்கும் விறகைப் போன்று அல்லது வெள்ளத்தின் குப்பைக் கூளங்களைப் போன்று இருந்திருக்கும்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது சொந்த ஒளிமிக்க இயல்பின் காரணத்தால் இந்த த.்.ப்ஸீரை எழுதுவதற்கு ஆற்றலுடையவனாக-வில்லை. மாறாக, இது அல்லாஹ்வின் கருணையாலும், அருளாலும் கிடைத்திருக்கிறது. திரையிட்டிருக்கும் முகத்தில் இருந்து திரை விலகுவது குறைபாடுள்ள எனது கைகளால் ஏற்படவில்லை. மாறாக, இது அல்லாஹ்வின் அருள் மற்றும் எல்லையற்ற அருட்கொடையால் ஏற்பட்டது.

# ஓர் அருளுக்குரிய மகனின் நற்செய்தி!



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஓர் அருளுக்குரிய மகனைக் குறித்த நற்செய்தி வழங்கப் -பட்டது. அதில் அவர் மிகவும் புத்திக் கூர்மை கொண்டவராக இருப்பார், தனது மஸீஹிய்யத்தின் குணத்தினால் பலரை குணப்படுத்துவார், பணிவு மிக்கவராகவும், மார்க்க உலக அறிவுகளால் நிரப்பப்பட்டவ -ராகவும் இருப்பார், இறைவனின் நிழல் அவர் மீது இருக்கும் என்றெல்லாம் கூறப்பட்டிருந்தது. இந்த முன்னறிவிப்பின் அசல் வாசகங்கள் கீழே தரப்படுகிறது.

“கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான். நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு எனது ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஷியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது தீய சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகிறேனோ அதனை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூய தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் போன்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் வெளிப்படையான திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு ஒரு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்து தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார்.

அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு புனித ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அசுத்தத்தில் இருந்தும் தூய்மை அடைந்தவர் ஆவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவ -ராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார். அவர் உலகத்திற்கு வருவார். தனது மஸீஹிய - குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால் இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திகூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். திங்கட்கிழமை; அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடம் இருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணில் இருந்து இறங்கி வந்தது போன்று அது இருக்கும். அவரது வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வகான அம்ரன் மக்ஸிய்யா - இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.” (மஜ்முஆ இஷ்திஹாரத் பாகம் 1, ஜுமுஆ குத்பா 21.02.2014)

இந்த முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக (முஸ்லிஹ் மவ்வூது) ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 1889 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள் பிறந்தார்கள்.

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் 52 அடையாளங்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1944 -ல் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி நான்தான் என்று அறிவித்தார்கள். அந்த வருடத்தின் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தும் போது, முன்னறிவிப்பின் தன்மை குறித்து 52 அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன என்று அவற்றை எடுத்துரைத்தார்கள். அவை பின்வருமாறு:

1) அவர் இறைவனின் வல்லமையின் அடையாளமாக இருப்பார்.
2) அவர் கருணையின் அடையாளமாக இருப்பார்.
3) இறை நெருக்கத்தின் அடையாளமாக இருப்பார்.
4) அவர் அருளின் அடையாளமாக இருப்பார்.
5) அவர் இறைவனின் பேரருளின் அடையாளமாக இருப்பார்.
6) அவர் ஆற்றல்மிக்கவராக இருப்பார்.
7) அவர் மகிமைக்குரியவராக இருப்பார்.
8) அவர் செல்வம் நிறைந்தவராக இருப்பார்.
9) அவர் மஸீஹின் ந∴ப்ஸைக் கொண்டவராக இருப்பார்.
10) உண்மையான ஆன்மாவின் பரக்கத்தால் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார்.
11) அவர் இறைவனின் வார்த்தையாக இருப்பார்.
12) இறைவனின் கருணையும் தன்மான உணர்வும் அவரை தனது மகிமைமிக்க வார்த்தைகளுடன் அனுப்பும்.
13) அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராக இருப்பார்.
14) அவர் மிகுந்த புரியும் திறன் கொண்டவராக இருப்பார்.
15) அவர் மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பார்.
16) அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார்.
17) அவர் அந்தரங்க அறிவுகளால் நிரப்பப்படுவார்.
18) அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார்.
19) திங்கட்கிழமையுடன் அவருக்கு குறிப்பான தொடர்பு இருக்கும்.
20) அவர் பாசமிக்க புதல்வராக இருப்பார்.
21) கண்ணியத்திற்குரியவராகவும், மேன்மைக்குரியவராகவும் இருப்பார்.
22) அவர் ஆரம்பத்தை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
23) அவர் இறுதியை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
24) அவர் உண்மையை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
25) அவர் உயர்வை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
26) அல்லாஹ் வானத்திலிருந்து இறங்கியது போல் என்ற கூற்றுக்குப் பொருத்தமானவராக அவர் இருப்பார்.
27) அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாக இருக்கும்.
28) அவரது வருகை இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும்.
29) அவர் ஒளியாக இருப்பார்.
30) அவர் இறை திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும் படி செய்யப்பட்டிருப்பார்.
31) இறைவன் தனது ஆவியை அவர் மீது இடுவான்.
32) இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும்.
33) அவர் மிக விரைவாக வளர்வார்.
34) அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார்.
35) அவர் பூமியின் எல்லைகள் வரை பிரசித்திப் பெற்று விடுவார்.
36) சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும்.
37) அவர் தனது இறுதி நோக்கத்தை அடைந்து விண்ணின் பக்கம் உயர்த்தப்படுவார்.
38) அவர் காலதாமதமாக வருபவராக இருப்பார்.
39) அவர் தொலைவிலிருந்து வருபவராக இருப்பார்.
40) தூதர்களின் பெருமையாக அவர் திகழ்வார்.
41) அவரது வெளிப்படையான அருள்கள் பூமி முழுவதும் பரவி விடும்.
42) அவரது அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவிவிடும்.
43) யூஸு∴பைப் போன்று அவர்களது மூத்த சகோதரர்கள் அவர்களை எதிர்ப்பார்கள்.
44) அவர் பஷீருத் தௌலாவாக, ஆட்சி தொடர்பான நற்செய்திகளைக் கூறுபவராக இருப்பார்.
45) அவர் திருமணங்கள் முடிப்பவராக இருப்பார்.
46) அவர் ஆலமே கபாப் ஆக இருப்பார். (அவரது காலத்தில் பெரும் பெரும் போர்கள் நடைபெறும்.)
47) அவர் அழகிலும், நன்மைகள் செய்வதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இணையானவராக இருப்பார்.
48) அவர் கலிமத்துல் அஸீஸ் - பிரியமான வார்த்தையாக இருப்பார்.
49) அவர் இறை வார்த்தைகளைக் கொண்டவராக இருப்பார். (கலிமத்துல்லாஹ்)
50) அவர் மார்க்கத்தின் உதவியாளராக இருப்பார்.
51) அவர் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யக் கூடியவராக இருப்பார்.
52) அவர் இரண்டாவது பஷீராக இருப்பார்.

(ஜுமுஆ குத்பா 18.02.2011)

5

# பராஹீனே அஹ்மதிய்யா

தொகுதி 1, 2

தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார் ஆஸ்டின்

## திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மையை நிலைநாட்டக்கூடிய வாதங்கள்

### பாகம் ஒன்று

در خور تابان مکن شک و گمان  تا ملامت رانہ گردی در خورے

ஒளிவீசும் சூரியனை சந்தேகப்படாதீர். நகைப்பிற்குரியவர்களாக ஆகி விடக் கூடாது என்று விரும்பினால் ஒளிவீசும் சூரியனை சந்தேகப்படாதீர்.

گر خدا خواہی چرا کج میروی  چوں نمی ترسی ز قہر قاہرے

இறைவனைத் தேடுபவராக இருப்பின் மீறுதல்களை தவிருங்கள். எஜமானனின் கோபாக்கினைக்கு நீங்கள் பயப்படவில்லையா?

چوں نمی ترسی ز روزِ باز پرس  چون نہ ترسی از حضورِ داورے

தீர்ப்பு நாளைக் குறித்த அச்சம் உங்களுக்கு ஏன் இல்லை? நீதி செலுத்தும் இறைவனைக் குறித்த பயம் உங்களுக்கு ஏன் இல்லை?

افترائے شاں چسان گشتت یقین  یا خدائت وانمودہ دفترے

அவர்களது பொய்களை நீங்கள் எங்ஙனம் நம்பிக் கொண்டு இருக்க முடியும் அல்லது எல்லா விஷயங்களும் எழுதப்பட்டுள்ள புத்தகம் ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா?

نور شاں یک عالمے را درگرفت  تو ہنوز اے کور در شور و شرے

நபிகளாரின் ஒளி முழு உலகையும் சூழ்ந்து இருக்கின்றது. இருந்த போதிலும் குருடர்களாகிய நீங்கள் ஆக்ரோஷத்துடன் அதை மறுக்கின்றீர்கள்.

لعل تابان را اگر گوئی کثیف  زین چہ کاہد قدر روشن جوہرے

பிரகாசமான மாணிக்கத்தை ஒன்றுக்கும் உதவாது என நீங்கள் கூறினாலும் ஒளிமிக்க மாணிக்கம் தனது விலைமதிப்பற்ற மேன்மையை இழந்து குறைந்து விடப் போவதில்லை.

طعنہ برپا کان نہ برپا کان بود  خود کنی ثابت کہ ہستی فاجرے

நேர்மையாளர்களைப் பற்றிய தூற்றுதல் அவர்களை சிறிதேனும் பாதிப்புக்குள்ளாக்காது. இருப்பினும் தூற்றுபவரின் பொல்லாங்கையே அந்த தூற்றுதல் வெளிப்படுத்தும்.

بغض بامردانِ حق نامردیست  آن بشر باشد کہ باشد بے شرے

இறை மனிதர்களின் மீது வன்மத்தை வளர்த்துக் கொள்வது கோழைத்தனமான செயல். நற்பண்புகள் கொண்ட பெரிய மனிதர் யாரெனில் அவரிடம் குறும்புகள் இல்லாதவர்.

وانکہ درکین و کراہت سوخت ست  نفس دون راہست صید لاغرے

வன்மம் மற்றும் விரோதத்தின் நெருப்பில் எரிகின்றவர் தன் சுயத்திற்கே பலியாகிப் போய் விடக்கூடிய பரிதாபத்திற்கு உரியவர்.

صد مراتب بہ زچشم اہل کین  چشم نابینا و کور و اعورے

ஒரு கண்ணை இழந்த அல்லது ஒரு குருடனின் கண்கள் வன்மத்துடன் இருப்பவரின் கண்களை விட சிறப்பானது.

برسر کین و تعصب خاک باد  ہم بفرقِ کین وران خاکسترے

வன்மம் மற்றும் பாகுபாடு கொண்டிருப்பவருக்கு ஐயோ! வன்மம் மற்றும் தீமை கொண்டிருப்பவர் மீது சாபமே.

جز بہ پابندی حق بند دگر  ورنہ گیرد با خدائے اکبرے

உண்மையின் பாதையைப் பற்றி உள்ள நிலையில் அன்றி ஒருவர் மகத்தான இறைவனை அடைய முடியாது.

ماہمہ پیغمبران را چاکریم  ہمچو خاکے اوفتادہ بر درے

நபிமார்களின் சன்னதியில் கிடக்கும் தூசுகளைப் போன்ற நாம் அவர்களுக்கு பணிவுடன் சேவை செய்யக்கூடிய சேவகர்கள் மட்டுமே.

ہر رسولے کو طریق حق نمود  جانِ ما قربان بر آن حق پرورے

நமது வாழ்வு ஒவ்வொரு இறைத்தூதருக்கும் அர்ப்பணம் ஆகட்டும். அவர்களே, நாம் உண்மையான இறைவனை அடையக்கூடிய வழியினைக் காட்டியவர்கள்.

اے خداوندم بہ خیل انبیا  کش فرستادے بفضل اوفرے

**என் இறைவா! உன் கருணையினால் நீ அனுப்பிய உன் நபிமார்களின் நிமித்தம்,**

معرفت ہم دہ چوں بخشیدی دلم  مے بدہ زان سان کہ دادی ساغرے

**நீ எனக்கு ஏங்கக்கூடிய உள்ளத்தை அருளி இருப்பதைப் போல ஞானத்தையும் வழங்கிடுவாயாக. மேலும் ஒரு கோப்பையை வழங்கியது போல ரசத்தை -யும் வழங்குவாயாக.**

اے خداوندم بنام مصطفیٰ کش شدے در ہر مقامے ناصرے

**என் எஜமானனகிய என் இறைவனே! ஒவ்வோர் அடியிலும் நீ உதவிய, உன்னால் தேர்ந்தெடுக்கப் -பட்ட, நபிகளாரின் நிமித்தம்,**

دست من گیر از رہ لطف و کرم در مہم باش یارو یاورے

**உனது கருணை மற்றும் இரக்கத்துடன் எனது கையைப் பிடித்துக் கொள்வாயாக! எனது எல்லா விவகாரங்களிலும் எனக்கு நண்பனாகவும் உபகாரி -யாகவும் இருப்பாயாக!**

تکیہ بر زورِ تو دارم گرچہ من ہمچو خاکم بلکہ زاں ہم کمترے

**நான் ஒரு தூசியாகவோ அதனினும் சிறியதான -தாகவோ இருந்தபோதிலும் எனது நம்பிக்கையை உனது ஆற்றல் மீது வைத்து விட்டேன்.**

உண்மையைத் தேடும் அனைவருக்கும் இப்பொழுது நான் தெளிவுபடுத்த விரும்புவது யாதெனில் “அல் பராஹீனுல் அஹ்மதிய்யா அலா ஹகிய்யத்தே கிதாபில்லாஹில் குர்ஆன் வந்நுபுவத்தில் முஹம்மதிய்யா” எனும் இந்நூல் இஸ்லாம் மார்க்கத்தின் உண்மை மற்றும் திருகுர்ஆன் அல்லாஹ்வினால் அருளப் பெற்ற தெய்வீக நூல் என்பதற்கான வாதங்களையும், ‘காத்தமுல் அன்பியா’ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவ உண்மையின் அடிப்படைகளையும் ஒவ்வொருவருக்கும் புரிய வைப்பதையே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

அசைக்க முடியாத மார்க்கமாகிய இஸ்லாத்தையும், திருக்குர்ஆனையும் மேன்மைமிக்க நபி (ஸல்) அவர்களையும் மறுப்பவர்கள் அனைவருக்கும் தக்க பதிலடியாகவும் அவர்களை வாய்மூடச் செய்யும்படியாகவும் அறிவுபூர்வமான அடிப்படையில் வாதங்களை வைக்கும் படியாகவும் எதிர்காலத்தில் ஒருவரும் இஸ்லாத்தை தாக்கும் படியாக மூடத்தனமான தைரியம் பெறாது இருக்கும் படியாகவும் செய்வதே இந்நூலில் நோக்கமாகும்.

இந்நூலில், ஓர் அறைகூவல், ஒரு முன்னுரை, நான்கு அத்தியாயங்கள் மற்றும் ஒரு முடிவுரை அடங்கியுள்ளன. இறைவன், இந்நூலை, உண்மையைத் தேடுபவர்களுக்கு அருள்களின் ஊற்றாகவும், இந்நூலை வாசிப்பவர்களுக்கு உண்மை மார்க்கத்திற்கு வழிகாட்டியாவும் இருக்கச் செய்வானாக! ஆமீன்.

## அறைகூவல்

இந்த அறைகூவலின் மூலம் நான் தெரிவிப்பதாவது, திருக்குர்ஆனிலிருந்து நான் எடுத்து வைக்கும் வாதங்கள் மற்றும் மறுக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் திருக்குர்ஆனுக்கு தங்களுடைய வேதங்கள் சமமானவை என்று நிரூபிக்கும் ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் பத்தாயிரம் வெகுமதி அளிப்பேன் என்பதே.

அவர்களுடைய வேதங்கள் அத்தகைய ஆதாரங்களை தர இயலவில்லை எனில் தங்களது வேதத்திலிருந்து இதை செய்ய முடியாமல் போகும்பட்சத்தில் தங்களது நூல்களில் இந்த தோல்வியை ஒப்புக் கொண்டு பின்னர் குறைந்தபட்சம் எனது வாதங்கள் அத்தனையையும் ஒன்றன்பின் ஒன்றாக மறுக்க முயற்சிக்க வேண்டும்.

பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலின் ஆசிரியராகிய நான், (திருக்குர்ஆன் ஆகிய) ஃபுர்கானே மஜீது மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவம் ஆகியவற்றின் உண்மைத் -துவத்தை மறுக்கக் கூடிய அனைத்து மார்க்கத் தலைவர்களுக்கும் எதிராக, இந்த அறிக்கையை என் சார்பாக வெளியிட்டு, ஓர் அறைகூவலாகவும் சான்றை முழுமைப்படுத்தும் வகையிலும் 10,000 ரூபாய் சன்மானம் என்ற வாக்குறுதியை வழங்குகிறேன்.

நான் இத்துடன் சட்டபூர்வமானதும் கட்டுப் -படுத்தும் வகையிலானதுமான ஓர் அறிவிப்பையும், ஷரீஅத் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் உறுதி -மொழியையும் வெளியிடுகிறேன். அது என்னவெனில், மறுப்பாளர்களிலிருந்து யாரேனும் ஒருவர் தம்முடைய வேதத்தின் மூலமாக, குர்ஆன் மஜீதிலிருந்து நாம் குர்ஆன் மஜீதின் உண்மைத்துவம் குறித்தும், ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தூதுத்துவத்தின் உண்மைத்துவம் குறித்தும் இதே பரிசுத்தமான நூலிலிருந்து நாம் எடுத்து எழுதியிருக்கின்ற அந்த எல்லா சான்றுகளையும், ஆதாரங்களையும் (தங்களின் வேதத்தில் இருப்பதாக) நிரூபித்துக் காட்டி விட்டால் அல்லது எண்ணிக்கையில் அவற்றிற்குச் சமமாக எடுத்து வைக்க இயலாவிட்டால், அவற்றில் பாதி அல்லது அவற்றில் மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒரு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு எடுத்து வைத்து விட்டால் அல்லது முற்றிலுமாக எடுத்து வைக்க இயலாவிட்டாலும், நமது சான்றுகளை வரிசைக் கிரமமாக முறித்துக் காட்டி விட்டால், இந்த எல்லா நிலைகளிலும் இரு

பிரிவினரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான மூன்று நடுவர்கள், 'நிபந்தனை இருக்க வேண்டிய அளவுக்கு நிறைவேறி விட்டது' என்று ஒன்றுபட்ட கருத்தைத் வெளிப்படுத்தி விட்டால், அறிக்கை வெளியிடுபவ -னாகிய நான், பதிலளிக்கும் அத்தகையவருக்கு எவ்விதமான சாக்குப்போக்கும், தந்திரமும் இன்றி, விலை மதிப்புள்ள எனது சொத்திலிருந்து பத்தாயிரம் ரூபாயை அந்த நபரிடம் ஒப்படைத்து விடுவேன்.

ஆனால் அவர் தமது வேதநூலிலிருந்து அறிவுப்பூர்வமான சான்றுகளை எடுத்து வைக்க முடியாமல்போய் விட்டால் அல்லது அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு ஏற்ப ஐந்தில் ஒரு பங்கு கூட எடுத்து வைக்க முடியவில்லை என்றால், அப்படிப்பட்ட நிலையில், (அவர்களின்) வேதம் முழுமையற்றதாக அல்லது அறிவுக்கேற்றதாக இல்லாததன் காரணத்தாலேயே அந்த நிபந்தனை -யின் இந்தப் பகுதியை தன்னால் நிறைவேற்ற முடியவில்லை என்பதை அவர் தெளிவாகவும் உறுதியாகவும் அவர் எழுதித் தர வேண்டியது வரும் என்பது தெளிவாகட்டும்.

மேலும் அவர் கேட்கப்பட்ட சான்றுகளை எடுத்து வைக்க முன் வந்தால், அவர் நினைவில் கொள்ள வேண்டும், ஐந்தில் ஒரு பகுதி சான்று கூட எடுத்து வைப்பதற்கு நாம் அனுமதியும், சலுகையும் வழங்கி இருக்கிறோம் என்பதற்கான நமது கருத்து, அந்த சான்றுகளின் எல்லா தொகுப்பையும் எவ்விதமான வித்தியாசமும், தனித்தன்மையும் இல்லாமல் பாதியை அல்லது மூன்றில் ஒரு பங்கை அல்லது நான்கில் ஒரு பங்கை அல்லது ஐந்தில் ஒரு பங்கை எடுத்து வைத்து விடுவது என்பதல்ல. மாறாக, இந்த நிபந்தனை ஒவ்வொரு வகைக்கான சான்றுகளிலிருந்தும் பாதியை அல்லது மூன்றில் ஒரு பகுதியை அல்லது நான்கில் ஒரு பகுதியை அல்லது ஐந்தில் ஒரு பகுதியை எடுத்து வைக்க வேண்டியது வரும் என்பதாகும்.

ஒருவேளை எவருடைய புரியும் திறனாவது குறிப்பிடப்பட்ட சொற்றொடரில் இருக்கின்ற 'சான்றுகளின் வகை' என்பதன் கருத்து என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். எனவே இந்த சொற்றொடரை விளக்கும் நோக்கத்தில் எழுதப்படுவது என்னவெனில், (உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவிக்கக் கூடியது எனும்) திருக்குர்ஆன் இறைவனாலேயே அருளப்பட்டது என்பதற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கும் திருக்குர்ஆன் மூலமாக நிரூபணம் ஆகின்ற சான்றுகளும், ஆதாரங்களும் இரு வகைப்படும். முதல் வகை, இந்தப் பரிசுத்தமான இறைநூல் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் -துவத்திற்கு உட்புறமான, தனக்கே உரித்தான அகச்சான்றுகள் ஆகும். அதாவது அதே பரிசுத்தமான இறைநூலின் சொந்த சிறப்புகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான இயல்புகள், விரும்பத்தக்க பண்புகள், முழுமைத்தன்மை வாய்ந்த குணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான சான்றுகள் ஆகும். இரண்டாவது வகை, திருக்குர்ஆன், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கான உறுதியான புறச்சான்றுகள் ஆகும். அதாவது வெளிப்புற நிகழ்வுகள், தொடர்ந்து நடைபெறுகின்றதும், ஒத்தவையாகவும் இருக்கும் சம்பவங்களிலிருந்து எடுக்கப்படும் சான்றுகள் ஆகும்.

பிறகு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகை சான்றுகள் ஒவ்வொன்றும் இரண்டு வகை -களைக் கொண்டுள்ளன. ஒன்று, அடிப்படையான (நேரான) சான்று. (இரண்டாவது) பல கூறுகளைக் கொண்ட சான்று. அடிப்படையான (நேரான) சான்று என்பது, திருக்குர்ஆனின் உண்மைத்தன்மையையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் உண்மைத்தன்மையையும் நிரூபிப்பதற்கு வேறு எதனையும் சேர்க்கவோ, இணைக்கவோ வேண்டிய தேவை இல்லாதது ஆகும்.

மேலும் 'பல கூறுகளைக் கொண்ட சான்று' என்பது அந்தச் சான்றை உறுதிப்படுத்துவதற்காக ஒன்றையொன்று சார்ந்திருக்கும் வாதங்களின் முழுத் தொகுப்பையும் பார்ப்பதற்கான தேவை இருக்கிறது. நாம் அதை முழுத் தொகுப்பாகப் பார்வையிட்டால் – அதாவது அதன் எல்லா கூறுகளையும் ஒரே பார்வையில் பார்த்தால், அவை எந்த அளவிற்கு முழுமை பெற்றதாக இருக்க வேண்டும் எனில் அது குர்ஆன் மஜீதின் உண்மையையும், ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் உண்மைத்தன்மையையும் நிலைநாட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேலும் இந்தக் கூறுகளை தனித்தனியாகப் பார்த்தால், சான்றுக்கென்று இருக்க வேண்டிய உறுதித்தன்மையைக் கொண்டிராமல் இருக்கலாம். மேலும் இந்த வேறுபாட்டுக்குக் காரணம் என்னவெனில், முழுத் தொகுப்பு என்பதும், தனிப்பட்ட கூறுகளும் கட்டளைகளைப் பொருத்தமட்டில், எப்போதும் வேறுபட்டதாக இருக்கும். எடுத்துக் –காட்டாக, ஒரு சுமையை பத்து பேர் சேர்ந்து ஒன்றாகத் தூக்க முடியும். அதே பத்து பேர் ஒவ்வொருவராக தூக்க விரும்பினால் அது சாத்தியமற்றதாகி விடுகிறது.

மேலும் 'அடிப்படையான சான்றுகள்' மற்றும் 'பல கூறுகளைக் கொண்ட சான்றுகள்' ஆகிய இவ்விரண்டு வகைகளின் ஒவ்வொன்றையும் அவற்றின் தனித்துவமான நிலைகள், வடிவங்கள், முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தால் அவற்றிற்கு இந்நூலில் 'பல வகைகளைக் கொண்ட சான்றுகள்' என்று பெயர். (அதாவது அவற்றை இந்நூலில் 'பல வகைகளைக் கொண்ட சான்றுகள்' என்ற பெயரால் குறிப்பிட்டிருக்கிறோம் – மொழிபெயர்ப்பாளர்). மேலும் இவை, எவற்றைக் கடைபிடிப்பதற்காக இந்த அறிவிப்பின் தொடக்கத்தில் நாம் இந்த நிபந்தனையை நியமித்து வைத்திருக்கிறோமோ அதே வகைகளாகும். எவர் (குர்ஆன் எனும்) ஃபுர்கானே மஜீதுக்கு எதிராக சான்றுகளில் இருந்து ஒவ்வொரு வகையையும் போட்டியிட முன் வருகிறாரோ, அவர் ஒவ்வொரு வகையிலுள்ள சான்றுகளில் இருந்து பாதியை அல்லது மூன்றில் ஒரு பங்கை அல்லது நான்கில் ஒரு பங்கை அல்லது ஐந்தில் ஒரு பங்கை எடுத்து வைக்க வேண்டும். அதாவது ஒரு வகையின் கீழ் அடங்கி இருக்கும் அந்த எல்லா சான்றுகளையும் எடுத்து வைக்க இயலாமல்போய் விடும் நிலையில், (அந்தப் பங்கை எடுத்து வைக்க வேண்டும்). (தொடரும்...)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

"ஷரீஅத், சிறு வயதில் நோன்பு வைப்பதை தடை செய்திருக்கின்றது. ஆனால், பருவ வயதிற்கு அருகில் செல்லும் தருணத்தில் பயிற்சிக்காக சில நோன்புகளை கண்டிப்பாக வைக்க வேண்டும். ஆனால், சில முட்டாள்கள் 6 அல்லது 7 வயது குழந்தையை நோன்பு நோற்க வைக்கின்றார்கள். நமக்கு இதற்கான நற்கூலி கிடைக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். இது நற்கூலியை பெற்றுத் தரும் பணியல்ல. மாறாக, இது அநீயாகும். ஏனென்றால் இது வளர்ச்சி அடைகின்ற பருவமாக இருக்கின்றது."

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்
ஜுமுஆ பேருரை 03.06.2016







*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

பணிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான வெற்றிக்கான இரகசியம் அல்லாஹ்வுக்கு முன்னால் குனிவதாகும். உங்களது பலவீனங்களை ஒப்புக் கொள்வதாகும். இல்லையென்றால் எவர் தன்னுடைய உள்ளத்தில் மனிதனுக்கு முன்னால் நான் பலவீனமானவாக இருக்கின்றேன். என்னிடம் ஆற்றல் இல்லை என்று நினைக்கின்றாரோ அவர் நயவஞ்சகராக இருக்கிறார். உள்ளத்தில் ஒன்றும் மக்களுக்கு முன்னால் வேறொன்றுமாக இருக்கின்றார். வெளிப்படையாக பொய்யான பணிவை வெளிப்படுத்துகின்றார்கள். எங்களால் எந்த வேலையும் செய்ய முடியாது. நாங்கள் பலவீனமானவர்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் உள்ளத்தில் என்ன நினைக்கின்றார்கள் என்றால், அது முற்றிலும் மாற்றமானதாக இருக்கின்றது. உண்மையில் அவர்கள் அல்லாஹ்வுக்கு முன்னால் குனியக்கூடியவர்கள் அல்ல. மாறாக அவர்களுடைய அகந்தை அந்த இடத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. உண்மையாகவே பணிவு, தன்னடக்கம் உள்ள அந்த மனிதர்கள் எப்படியிருப்பார்கள் என்றால், அவர்கள் வாயாலும் கூட, உள்ளத்தாலும் கூட அந்த விஷயத்தை வெளிப்படுத்தி விடுகின்றார்கள். அவர்கள் உண்மையிலேயே பணிவுள்ளவர்கள், தன்னடக்கம் உள்ளவர்கள் ஆவார்கள் என்பதை வெளிப்படுத்தி விடுவார்கள். அப்படிப்பட்டவர்களின் சிந்தனை மிகவும் தெளிவாக இருக்கும். எல்லாத் திறமையும் அவருக்கு சொந்தமானது கிடையாது. அவர்களது தொடர்பு உறுதியான படைப்பாளனோடு இல்லாதவரை இறைவன் தரப்பிலிருந்து உதவி கிடைக்காதவரை தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் நம்புகின்றார். இந்த தரத்தை நீங்கள் பெறுவீர்கள் என்றால், அப்பொழுதுதான் உண்மையான முறையில் நீங்கள் வழங்கக்கூடிய அந்த ஆலோசனைகள் தகுதி வாய்ந்தவையாக இருக்கும். காலத்தின் கலீஃபாவுக்கு முன் எடுத்து வைப்பதற்கு தகுதி வாய்ந்தவையாக இருக்க முடியும். மஜ்லிஸே முஷாவரத்திற்குப் பிறகு நீங்கள் எந்த ஆலோசனைகளை எடுத்து வைத்தாலும் சரி காலத்தின் கலீஃபா எவ்வாறு தீர்ப்பு கூறுகின்றார்களோ அதற்குப் பிறகு ஷூராவின் உறுப்பினர்கள் என்ற வகையில் உங்களது பொறுப்பு கடமை என்னவென்றால், அந்த வேலை நடக்க வேண்டும். அவற்றின்படி அமல் செய்யப்பட வேண்டும். அந்த எல்லாத் தீர்மானங்களின் படியும் நீங்களும் அமல் செய்ய வேண்டும். நீங்கள் வெறும் சொற்பொழிவு ஆற்றி விடுவது மட்டும் போதுமானது அல்ல. பலமுறை ஷூராவில் பார்க்க முடிகிறது. மக்கள் ஆக்ரோஷமாக ஆவேசப்பட்டு சொற்பொழிவாற்றுவார்கள். ஷூராவின் நடவடிக்கை முடிந்த உடனேயே அவர்கள் தங்களது இந்த வேலையை தங்களது இந்த பொறுப்பை மறந்து விடுவார்கள். அவர்களது சொந்த வேலைகளில் மூழ்கி விடுவார்கள்.

நீங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ஷூராவின் அறிக்கைகளைப் படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அதில் நீங்கள் பார்க்க முடியும். நம்பகத்தன்மையோடு பல விஷயங்களை செய்வதில் நீங்கள் தோல்வி அடைந்திருக்கின்றீர்கள். பல தீர்மானங்களின்படி நீங்கள் செயல்பட வைக்கவே முடிவதில்லை. நீங்கள் கடந்த பல தீர்மானங்களை மறந்தே விட்டீர்கள். எனவே கடந்த அந்த தீர்மானங்களை மீண்டும் கவனமாக ஆழ்ந்து படியுங்கள். அவற்றை சிந்தனையில் வைத்திருங்கள். அந்த ஆலோசனைகள் இந்த மஜ்லிஸே ஷூராவில் வழங்கப்படக்கூடிய ஆலோசனைகள் என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பாருங்கள். எப்படி அதை சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும்

என்பதை யோசித்துப் பாருங்கள். நான் கூறியது போன்று நம்முடைய நோக்கம், கருத்து அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்பதாக மட்டும்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் ஓர் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியும். எல்லா வேலையும் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெற வேண்டும் என்பதற்காக செய்யும்போதுதான் அது சாத்தியப்பட முடியும்.

சில மக்கள் வாதம் புரிகின்றார்கள் அல்லது முறையிடுகின்றார்கள். எங்களுடைய வழிவகைகள் குறைவாக இருக்கின்றன. எனவே தொண்டுகளை முழுமையாகச் செய்ய முடியாது. இந்த வழிமுறை தவறானதாகும். அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையில் குறைவு உள்ளது. எங்களிடம் தேவையான பொருள்கள் இல்லை என்பது ஒரு சாக்குப் போக்கு ஆகும். எப்பொழுதும் உங்களுடைய எண்ணங்களை உயர்த்தி வையுங்கள். உறுதியான எண்ணத்துடன் இருங்கள். முழுமையாக உறுதியான பாதத்துடன் இருங்கள். எனக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அதை நான் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருங்கள். அதில் துஆ மற்றும் இறைவணக்கம் மூலமாக அல்லாஹ்வின் உதவியை நாடுங்கள். அல்லாஹ்விடம் உதவி கோரிக் கொண்டே இருங்கள். மேலும் உங்களுடைய அந்தத் திறமையை முழு உச்சம் வரை எட்ட வைத்தவாறு நீங்கள் தியாகம் செய்யுங்கள். இவ்வாறிருக்கும் போது பிறகு ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் தத்தமது செயல் வட்டத்தில் தமது துறையில் தனது வேலையில் அந்தப் பொறுப்பாளரால் சிறந்ததொரு நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வர முடியும். இந்த எண்ணத்துடன் நீங்கள் வேலை செய்தால்தான் உங்களால் இறை கலீஃபாவுக்கு உண்மையான உதவியாளராக ஆக முடியும். வெறும் சொற்களால் உறுதி எடுத்துக் கொள்வதால் மட்டும் அந்த உறுதிமொழியை நீங்கள் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பதால் நீங்கள் சுல்தானே நஸீர் ஆக முடியாது. காலத்தின் கலீஃபாவிற்கு உதவியாளாராக முடியாது. அல்லாஹ்வுக்கு முன்பு மிகவும் உத்வேகத்துடன் கலப்பற்ற தன்மையுடன் அல்லாஹ்வின் வழியில் நீங்கள் தியாகம் செய்ய வேண்டும். இது தொடர்பாக நீங்கள் வரக்கூடிய உங்கள் சந்ததிகளுக்கும் தர்பிய்யத் வழங்குங்கள். உங்களின் கீழ் இருப்பவர்களை நேசியுங்கள். மேலும் அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். கடுமையாக உழைத்து துஆ செய்து எல்லா தியாகங்களும் செய்து வாருங்கள். இந்த ஆன்மாவை அடுத்த சந்ததிகளிடமும் நீங்கள் கடத்துங்கள். நீங்கள் இந்தக் கோணத்தில் உங்களுடைய மார்க்கத்திற்கு தொண்டாற்றும்போது நீங்களும் அந்த நன்மக்களுடன் இணைந்து விடுவீர்கள். ஷூராவில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றனவோ அவற்றின்படி செயல்பட வைப்பதற்கும் நீங்கள் உரியவர்களாகி விடுவீர்கள்.

கடைசியில் நான் கூறுகின்றேன். நீங்கள் ஷூராவின் நடவடிக்கையின்போது ஷூராவின் அசல் கண்ணியத்தை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். தேவையில்லாத வீணான விவாதங்கள் செய்ய வேண்டாம். தேவையில்லாத முன்னுரைகளை நீங்கள் கொடுக்க வேண்டாம். நீங்கள் என்ன ஆலோசனை செய்ய வேண்டுமோ அதற்கு பலன் இருக்கின்றதா? அது தேவையானதா? அதிக பலன் அளிக்கக்கூடியதா? என்று சிந்திக்க வேண்டும். வேறு யாராவது அந்த ஆலோசனையை கூறினார் என்றால் உங்கள் மூளையில் இருந்த அந்தக் கருத்தை யாராவது கூறி விட்டால் நீங்கள் மீண்டும் அந்த ஆலோசனையைக் கூறி ஷூராவின் நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

நான் கூறுகின்றேன். உங்களுடைய சிந்தனையை நீங்கள் கொன்று விடுங்கள். பிறகு நடவடிக்கையில் நீங்கள் எண்ணம் கொள்ளுங்கள். எப்பொழுதும் அல்லாஹ்வின் மீதான அச்சம், இறையச்சம் உங்களுடைய உள்ளத்தில் இருக்க வேண்டும்.




நீங்கள் தக்வா – இறையச்சத்துடன் ஆலோசனை வழங்க வேண்டும். எந்த தீர்மானம் எடுக்கின்றீர்களோ எந்த ஆலோசனை வழங்குகின்றீர்களோ அவை உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சி நீங்கள் ஆலோசனை கூற வேண்டும். அவ்வாறிருந்தால் நீங்கள் அந்த கண்ணியத்தை நிலைநாட்ட முடியும். அது ஷூராவின் உரிமையாகவும் இருக்கின்றது. இல்லையென்றால் உங்களது ஆலோசனை உலக ரீதியிலான அடிப்படையாக இருக்கும். அதில் ஆன்மிகத்திற்கான எந்தவொரு ஆன்மாவும் இருக்காது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஷூராவில் கலந்து கொள்ள வந்திருக்கும் அந்த நண்பர்களிடம் கூறுகின்றேன். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை தங்களது உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வெறும் சொற்கள் மூலமாக மேலும் அழகாக எடுத்து வைக்கும் பேச்சாற்றல் மூலமாக மட்டும் உலகிலும் மறுமையிலும் எந்தப் பலனும் கிடைக்காது. நாம் இந்த உலகத்திலும் மறுமையிலும் வெற்றியை தரக்கூடிய ஒரே விஷயம்தான் இருக்கின்றது. அது என்னவென்றால் நாம், ரப்புனல்லாஹ் – அல்லாஹ் ரப் ஆவான் என்ற அந்த விஷயத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்; பறைசாற்ற வேண்டும். இந்த ஆன்மா நம்முடைய உள்ளத்தாலும் ரப்பனா இன்னா ஸமிஃனா முனாதியய் யுனாதீ லில் ஈமானி வஆமினு பிரப்பிகும் ஃபஆமன்னா என்ற அந்த வசனம் இல்லை என்றால் அதாவது, எங்கள் இறைவா! உங்கள் ரப்பின் மீது ஈமான் கொள்ளுங்கள் என்று ஓர் அறிவிப்பாளரின் அறிவிப்பை நாங்கள் கேட்டோம். எனவே நாங்கள் ஈமான் கொண்டோம். அப்படிப்பட்ட மக்களுடைய அமலில் இந்த ரூஹ் மட்டும் கிடையாது. உலக ஆற்றலைப் பெறுவதும் நோக்கமாக இருக்கும். பிறகு இந்த வாதங்களுக்கு எந்தவொரு முக்கியத்துவமும் இருக்காது.

நினைவில் கொள்ளுங்கள். ஒரு விஷயம் நம்மை உலகத்தை விட்டும் தனிச் சிறப்பாக ஆக்கிக் காட்டுகிறது. நாம் அல்லாஹ்வின் குரலைக் கேட்டோம். அல்லாஹ்வின் அறிவிப்பாளரின் அந்தக் குரலைக் கேட்டோம். இந்தக் காலத்தில் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அறிவிப்பு செய்யப்படுகின்ற அந்த அறிவிப்பாளரின் குரலைக் கேட்டோம். அவர்கள் மேற்கொண்ட அந்தப் பணியை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக அவருடைய ஜமாஅத்தில் இணைந்துள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு நம்மீது கடமை என்னவென்றால் நாம் தொடர்ச்சியாக அல்லாஹ்வுடன் இருக்கக்கூடிய நமது அன்பின் தரத்தை அதிகரிக்க வேண்டும். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது இந்த ஆசையையும், துஆவையும் வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ், அவன் மீதான அச்சத்தை



நம்முடைய ஒவ்வொரு சிந்தனையிலும் ஒவ்வொரு கருத்திலும் அதன் பின்னணியில் வைப்பானாக. நம்முடைய நாவு அல்லாஹ்வின் மீதான அச்சத்தால் இயங்கட்டுமாக. நமது சிந்தனையில் தக்வா – இறையச்சம் இருக்கட்டுமாக. நமது ஒவ்வொரு கருத்திலும் அல்லாஹ்வின் மீதான அச்சம் இருக்கட்டுமாக. ஒவ்வோர் ஆலோசனையிலும் அல்லாஹ்வின் மீது அச்சம் இருக்கட்டுமாக. நமது உள்ளம் எப்பொழுதும் தக்வா – இறையச்சத்தால் நிறைந்திருக்கட்டுமாக. இதுதான் நமது வெற்றிக்கான வழியாக இருக்கின்றது. நான் துஆ செய்கின்றேன். ஷூராவின் பொறுப்பாளர்கள் அனைவரும் தம்முடைய அகந்தை அகம்பாவத்தை விட்டு விட்டு தன்னுடைய ஆணவத்தை விட்டு விட்டு முழுக்க முழுக்க உங்கள் நாவிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு சொல்லும் அல்லது நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் ஆலோசனையும் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக மட்டுமே இருக்கட்டுமாக. மேலும் அஹ்மதிய்யத்தின் பணியை நாம் முன்னோக்கி எடுத்து வைக்கும் உதவியாளராக இருக்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருக்கட்டுமாக. இது மட்டுமே உங்களது நோக்கமாக இருந்தால் நீங்கள் எப்படிப்பட்ட பங்களிப்பை நிறைவேற்றுவீர்கள் என்றால் அது ஓர் ஆன்மிக மறுமலர்ச்சியை புரட்சியைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். அதற்காகத்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அதற்காகத்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது நீங்கள் ஈமான் கொண்டுள்ளீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். ஜமாஅத் உங்களிடம் அமானிதத்தை ஒப்படைத்துள்ளது. இந்த அமானிதத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டால் இந்த ஆன்மாவை புரிந்து கொண்டால்தான் உண்மையான முறையில் நம்முடைய வெற்றிக்கு காரணமாக அமையும். அல்லாஹ் தனது அருளாலும் கருணையாலும் உங்கள் அனைவருக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. பணி செய்வதற்குத் தகுதியுடையவர்களாக நீங்கள் ஆவீர்களாக. ஷூராவின் உண்மையான நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆவீர்களாக.

சில இடங்களிலும் கூட பாகிஸ்தானிலும் இன்றைய காலத்தில் தேர்தல்கள் நடக்கின்றன. இந்தியாவிலும் தேர்தல் நடக்கின்றன. உருது பேசக்கூடிய பகுதிகளிலும் தேர்தல் நடக்கின்றன. எனவே சுருக்கமாகக் கூறி விடுகின்றேன். இங்கிருக்கும் மக்களுக்கும் சரியாகப் புரிவதில்லை. எனவே உருதுவிலும் சற்று கூறி விடுகின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஷூராவின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவர் –களாக ஆக்குவானாக. தக்வா – இறையச்சத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியவாறு உங்கள் ஆலோசனைகளை எடுத்து வைப்பீர்களாக. எப்படிப்பட்ட மக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் உண்மையிலேயே அந்தப் பொறுப்புக்கு உரியவர்களாக இருக்க வேண்டும். ஒருவரை தெரிந்தவர் என்பதற்காக தனிப்பட்ட தொடர்பு இருப்பதன் காரணத்திற்காக நீங்கள் யாரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. எல்லா வேலைகளின் அடிப்படையும் இறையச்சத்தில் இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் தான் நமது வெற்றியோடு நமது நோக்கங்களைத் தீர்மானிக்க முடியும். இல்லையென்றால், வெற்றி பெற முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த அடிப்படையைத்தான் வைத்திருக்கின்றார்கள். அன்னார் பல்வேறு இடங்களில் அறிவுரை கூறியிருக்கின்றார்கள். இதன் தொகுப்பு வெளியாகி விட்டது. அதை நாம் படிக்க வேண்டும். உருது தெரிந்தவர்கள் அதை படிக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன். இப்பொது இதை முன்னால் நிறுத்தியவாறு சில விஷயங்களை நான் எடுத்து வைப்பேன். ஷூராவின் உறுப்பினர்களுக்கான நோக்கம் என்னவென்றால், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதாகும். இந்த நோக்கத்தை முன்னால் வைத்தால் பிறகுதான் நாம் வெற்றி பெற முடியும். பிறகுதான் நாம் ஈமானுடன் நேர்மையுடன் நீதியுடன் நம்முடைய கருத்துகளை ஆலோசனைகளை தெரிவிக்க முடியும். நம்முடைய ஆலோசனைகளை எடுத்து வைக்கும் பொழுது யாருடைய பெயரையும் முன்மொழியும் போது உறவினர்கள் அன்பர்கள் இதையெல்லாம் முன்னால் வைக்கக் கூடாது. நம்முடைய

ஆசைகள் எதையும் முன்னால் வைக்கக் கூடாது. நாம் என்ன நினைக்கிறோம் என்ற நம்முடைய எண்ணங்களை முன்னால் வைக்கக் கூடாது. மாறாக எல்லாவற்றையும் அல்லாஹ்வுக்காக மட்டுமே செய்ய வேண்டும். பல மக்கள் இருக்கின்றார்கள். நம்மில் அவர்கள் இந்த விஷயங்களை அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதற்காக எல்லா வகையான தியாகங்களையும் செய்திருக்கின்றார்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கின்றார்கள்.

எனவே இவ்வாறு செய்த பிறகும் கூட நாம் பல்வேறு கோணங்களில் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக நாம் தியாகம் செய்த பிறகு நம்முடைய நஃப்ஸிற்காக அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் பெற்று விட்டோம் என்றால் உலகை சந்தோஷப்படுத்தி விட்டு நாம் அல்லாஹ்வை இழந்து விட்டோம் என்றால் இரு பக்கமும் நாம் இழந்து விடுவோம். பிறகு நம்மை விட பெரிய துர்பாக்கியசாலி யாருமே இருக்க முடியாது. எனவே நமக்கு மிகவும் அவசியமானது என்னவென்றால், நாம் நம்முடைய எல்லா வேலைகளிலும் அல்லாஹ்வின் விருப்பத்தை மற்றும் அல்லாஹ்வின் தன்னிறைவை நாம் முன்னால் வைக்க வேண்டும். நம்முடைய நஃப்ஸை ஆன்மாவை நடுவிலிருந்து அகற்றி விட வேண்டும். ஷூராவின் ஒவ்வொருவரும் இதை முன்னால் வைத்தால் ஒவ்வொரு பொறுப்பாளரும் இதை முன்னால் நிறுத்தினால் நமது ஜமாஅத்தில் ஒரு மாபெரும் அமைப்பு உருவாக முடியும். இதற்கான உதாரணம் வேறு எங்குமே கிடைக்க முடியாது.

எனவே இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: இறைவன் கிடைப்பது சாதாரண விஷயம் கிடையாது. எனவே எப்படிப்பட்ட தியாகம் செய்ய வேண்டும் என்றால் அதற்கான முன்னுதாரணம் வேறு எந்த தியாகத்திலும் தென்படக் கூடாது. உலகில் தியாகங்கள் செய்யப்படுகின்றன. எப்படிப்பட்ட தியாகங்கள் செய்யப்படு–கின்றன என்றால் அவற்றின் விபரங்களை அறிந்து ஓர் உருக்கமான உள்ளம் கொண்ட ஒரு மனிதன் பதற்றமடைந்து விடுகின்றான்; நடுநடுங்கி விடுகின்றான். ஒரு மனிதன் புல்லரித்துப் போகின்றான். அந்த எல்லா தியாகங்களும் எதற்காக செய்யப்படுகின்றன என்றால், தான் என்ற தனது அகந்தை மற்றும் தனது கண்ணியத்தைப் பெறுவதற்காகத்தான் செய்யப்படுகின்றன. தன்னைப் பெருமைப்படுத்திக் காட்டுவதற்காகத்தான் தியாகம் செய்யப்படுகின்றன. இது போன்ற தியாகங்களை ஊக்குவிக்க முடியாது. ஏனென்றால் இதன் மூலமாக இறைவன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் அல்லாமல் மனிதன் தனக்கு கண்ணியம் கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்கின்றான். மாறாக நமது நோக்கம் எவ்வாறிருக்க வேண்டும் என்றால் அல்லாஹ்வின் விருப்பத்தை திருப்தியைப் பெற வேண்டும் என்பதாக இருக்க வேண்டும்.

எனவே நம்முடைய தியாகம் எதற்காக இருக்க வேண்டும் என்றால், அது உலகம் சம்பந்தப்பட்டதாக இருக்கக் கூடாது. உலகம் செய்யக்கூடிய அந்த தியாகம் நமக்கு எந்தப் பலனையும் கொடுக்க முடியாது. எந்த நோக்கத்தைப் பெறுவதற்காக நாம் நின்று கொண்டிருக்கிறோமோ அந்த நோக்கத்தை நாம் பெற முடியாது. வாழ்வை அர்ப்பணித்து உயிரை அர்ப்பணித்து இறைவன் கிடைத்து விடுவான் என்றால், பல மக்கள் உயிரைத் தியாகம் செய்கிறார்கள்; ஆனால் இறைவன் அவர்களுக்கு கிடைப்பதில்லை. பொருள் செலவு செய்து இறைவன் கிடைத்து விடுவான் என்றால், பல மக்களை நாம் பார்க்க முடிகிறது. அவர்கள் பொருள் தியாகம் செய்கிறார்கள். ஆனால் இறைவனை அவர்களால் பெற முடியவில்லை. கண்ணியத்தை இழப்பதால் இறைவன் கிடைத்து விடுகின்றான் என்றால், பல மக்கள் கண்ணியத்தை தியாகம் செய்கின்றார்கள். ஆனால் அவர்களால் இறைவனைப் பெற முடியவில்லை. சொத்துக்களை தியாகம் செய்து இறைவன் கிடைத்து விடுவான் என்றால், பல மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் சொத்துக்களையும் தியாகம் செய்கின்றனர். ஆனால் இப்லீஸ் இறைவனை விட்டு தூரமாக இருப்பது போன்று அவர்கள் இறைவனை விட்டும் தூரமாக இருக்கின்றார்கள். நஃப்ஸை தியாகம் செய்வதனால் நாட்டைத் தியாகம் செய்வதனால் இறைவன் கிடைக்கின்றான் என்றால் பல மக்கள் இது போன்று தியாகம் செய்கின்றார்கள். ஆனால் இறைவனின் அருளிலிருந்து விலகி இருக்கின்றார்கள். ஆக இந்த தியாகங்கள் போதுமானதல்ல. இவை இடைச்செருகலான தியாகங்கள்தான். நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள். இந்த விஷயத்தில் ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் ஜமாஅத்திற்காக செய்யக்கூடிய அந்த தியாகம் நீங்கள் செய்யக்கூடிய அந்த இபாதத் அல்லது நீங்கள் என்ன வேலைகள் எல்லாம் செய்கின்றீர்களோ அல்லாஹ்வின் விருப்பத்திற்காகத் தான் செய்கின்றீர்களா? இல்லையா என்பதைப் பாருங்கள்.

இங்கு வந்திருக்கும் பொறுப்பாளர்களோ அல்லது பிரதிநிதிகளோ அல்லது ஏற்கனவே பொறுப்பாளர்களாக இருக்கின்றவர்கள் ஆண்டு முழுவதும் ஜமாஅத்திற்காக வேலை செய்கிறார்களோ அவர்கள் சிந்திக்க வேண்டும். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக, அல்லாஹ்வை திருப்திப்படுத்து–வதற்காக வேலை செய்கின்றார்களா இல்லை பொறுப்பு கிடைத்து விட்டது என்பதற்காக செய்கின்றார்களா? இப்போது ஜமாஅத்தில் அவர்களுக்கு ஓர் அந்தஸ்து வந்து விட்டது என்பதனால் வேலை செய்கின்றார்களா? அவ்வாறுதான் என்றால் இந்தப் பொறுப்புக்கு எந்தவொரு பலனும் கிடையாது. இப்படிப்பட்ட பிரதிநிதித்துவத்திற்கு எந்தவொரு பயனும் கிடையாது. உண்மையான தியாகம் உண்மையான அந்த அர்ப்பணிப்பு முற்றிலும் மாறுபட்டதாகும். அது உயிரை வைத்து செய்தாலும் சரி சிந்தனையை வைத்து செய்தாலும் சரி அது பணத்தை வைத்து செய்தாலும் சரி கண்ணியத்தை வைத்து

செய்தாலும் சரி அது என்னவென்றால் மனிதனுடைய அந்த தான் என்ற அகந்தையாக இருக்கின்றது. நான் என்ற அந்த சிந்தனை இருக்கின்றது. நானும் ஒருவன் என்று அவன் நினைக்கின்றான். தன் மீது இருக்கக்கூடிய ஒரு உணர்வு இருக்கின்றது. அதற்காக தன்னுடைய பொருளை தன்னுடைய கண்ணியத்தை தன்னுடைய ஞானத்தை நாட்டை தன்னுடைய நேரத்தை அனைத்தையும் அந்த மனிதன் தியாகம் செய்து விடுகின்றான். அவன் எனக்கு ஏதோ ஆபத்து என்று நினைக்கும்போது அவன் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. சமுதாயத்திற்காக, நாட்டிற்காக, கண்ணியத்திற்காக தியாகம் செய்யக்கூடியவர்கள் தங்களுடைய கண்ணியத்தைப் பெறுவதற்காக செய்கின்றார்கள். வெளிப்படையாக கண்ணியத்தை இழப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அவர்கள் எந்த விஷயத்திற்காக தியாகம் செய்கின்றார்களோ அது அவர்களின் நான் என்ற அகந்தையாக இருக்கின்றது. அந்த தியாகங்கள் அவர்களுடைய அந்தக் கருத்தின் கீழ் இருக்கின்றது. அதனால் அந்த தியாகத்தை செய்கின்றார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: எந்த விஷயம் எனக்காக தியாகம் செய்ய வேண்டுமோ அது உங்களது விருப்பத்தின்படி செய்யக்கூடிய அந்த தியாகம் கிடையாது. இறைவனைப் பெறுவதற்காக பொருள் மற்றும் உயிர் மற்றும் நேரம் ஆகியவற்றை தியாகம் செய்வது மட்டும் போதாது. மனிதன் தமது உணர்வுகளை தியாகம் செய்ய வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றான். நான் என்ற அந்த அகந்தையை தியாகம் செய்ய வேண்டும் என்பதையே அல்லாஹ் மனிதனிடம் எதிர்பார்க்கின்றான். இந்த உணர்வுதான் அடிப்படையானதாகும். நான் என்பதை அவன் அழித்துக் கொள்ளாதவரை அல்லாஹ் மனிதனை ஏற்றுக் கொள்ளவே மாட்டான். அப்பொழுதுவரை இணைவைப்பவனாக இருக்கின்றான். அப்படிப்பட்டவன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற முழக்கமிட்டாலும் சரி அவன் தன்னைத்தானே ஒரு வகையில் வணங்கக்கூடியவனாக நினைக்கின்றான். நான் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறும் பொழுது அதனை அவனே மறுத்து விடுகின்றான். ஏனென்றால் நான் என்ற அந்த விஷயம் இருக்கும் போது லாஇலாஹ இல்லல்லாஹ் என்று அவனால் சொல்ல முடியாது.

அல்லாஹ் ஒரு விஷயத்தின் தியாகத்திற்கான வேண்டுகோள் வைக்கின்றான் என்றால் அதாவது எதிர்பார்க்கின்றான் என்றால் அது என்னவென்றால் நான் என்பதை தியாகம் செய்ய வேண்டும். மனயிச்சையை ஒழித்து விட வேண்டும். உங்களுடைய விருப்பம் எதுவும் இருக்கக் கூடாது. என்று அல்லாஹ் நினைக்கின்றான். லா ஷரீக் அதாவது இணையற்றவன் அல்லாஹ் மட்டும்தான். நம்முடைய நஃப்ஸை அதற்காக அழித்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்...)

## முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தினமும், நமது பொறுப்புகளும்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: இன்று நாம் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தினத்தைக் கொண்டாடும்போது, நமது குறிக்கோள்கள் மிகவும் உயரியவையாக இருக்கின்றன. மிகவும் உயர்ந்தவையாக இருக்கின்றன. மிகவும் மேலானவையாக இருக்கின்றன. அதைப் பெறுவதற்கு மிக உயரிய தைரியத்தையும் காட்ட வேண்டியது வரும் என்ற துடிப்பை நம்மில் பெரும்பான்மையினர் தம்மிடம் உருவாக்கும்போதுதான் அது உண்மையான முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தினமாக இருக்கும். நம்மிடம் மிக உயரிய மாற்றங்களையும் உருவாக்க வேண்டியது வரும். பரிசுத்தமான மாற்றங்களையும் உருவாக்க வேண்டியது வரும். இறைவனுடன் ஒரு தொடர்பையும் ஏற்படுத்த வேண்டியது வரும். இஸ்லாத்தைப் பற்றிய ஒரு வேதனை உணர்வையும் நம்மிடம் உருவாக்க வேண்டியது வரும். உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்பு, நேசம் தொடர்பான வேதனையை உருவாக்கியவாறு, அதை வெளிப்படுத்தவும் வேண்டியது வரும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கி இருந்த எண்ணற்ற சிறப்புகளைக் கொண்ட மகனைப் பற்றிய நற்செய்தி என்பது இவ்வளவு ஆழமான கருத்துகளையும் தன்னிடத்தில் கொண்டிருக்கிறது.** (ஜுமுஆ பேருரை 17.02.2012)